விலை சதம் 50 ★ பக்கங்கள்— 8

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ், றீக்கோ பீடா வகைகளுக்கும்

றிக்கோ ஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 464


# ஈழநாடு வார மலர்

THE EELA NADU VARAMALAR


முக்கிய அறிவித்தல்

மில்க்வைற் தயாரிப்புகள்

எங்கள் தயாரிப்புகள் யாவும் மேலுறைகளுடன் கிடைக்கும். எவற்றுக்கும் நாங்கள் விலை கூட்டவில்லை.

தொழிலதிபர்

மலர் 19 ஆவணி 19 றமழான் 19 ஞாயிற்றுக்கிழமை [4—9—77] இதழ் 204

# விசாரணை; குற்றவாளிகளுக்குத் தண்டனை, இடைக்கால வசதி

## நிம்மர்மண்டபக்கூட்டத்தில் வற்புறுத்தல்

### அரசுடன் பேச்சு நடத்தவும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலவர சம்பவங்கள் பற்றி ஓர் பாரபட்சமற்ற விசாரணை நடாத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். அதேசமயம் ஓர் இடைக்கால ஏற்பாடாக நிலை பெயர்ந்த ஊழியர்களை அவர்கள் தற்போது சமுகமளிக்கும் அலுவலகங்களில் தொடர்ந்தும் தொழில் புரிய அனுமதிக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் நிம்மர் மண்டபத்தில் நடந்த பாதிக்கப்பட்ட அரசு, அரசு சார்ந்த ஊழியர் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

உயிர்ச்சேதம் பொருட்சேதம் ஆகிவற்றிக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்றும்.

இருந்த இடங்களில் விட்டு வந்த உடைமைகளை எமது சொந்த ஊர்களுக்கு இலவசமாக ஏற்றி வருவதற்கு உரிய ஒழுங்குகள் செய்யவேண்டும் என்றும்

நிலைபெயர்க்கப்பட்ட ஊழியர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே கடமையாற்ற வழிசெய்யவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வூழியர்களில் பெரும்பாலானவர்களையும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே தொழில்புரிய அனுமதிக்க வேண்டும். இவ்வாறு தொழில் புரிய அனுமதிக்கப்படமுடியாதவர்களும், வேறுபகுதிகளில் தொழில் புரிய விரும்பாதவர்களும் ஓய்வுபெற அனுமதிக்கப்படுவதுடன் அல்லது நஷ்டஈடு வழங்கப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட ஊழியர்களின் பிள்ளைகள் தங்கள் வதிப்பிடங்களுக்கு அண்மையிலுள்ள பாடசாலைகளிலேயே கற்பதற்கான ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

டாக்டர் கனேஸ்வரன் தலைமையில் நடந்த இக்கூட்டம் மண்டபம் நிரம்பி வழிந்ததோடு நிம்மர் மண்டப வளவிற்குள்ளும், வீதியிலும் தமிழ் ஊழியர்கள் திரண்டு நின்றனர்.

பாதிக்கப்பட்ட அரசு, அரசு சார்ந்த தமிழ் ஊழியர் சங்கம் ஒன்று கூட்டத்தில் நிறுவப்பட்டது. இச்சங்க தூது கோஷ்டியினர் விரைவில் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களையும் சந்தி[illegible] தங்கள் கோரிக்கைபற்றி பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பதிக்கப்பட்டவர்களின் விபரங்களை சங்கம் இபபொழுது திரட்டிவருகிறது.

பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தத்தமது திணைக்களம், அல்லாது கூட்டுத்தாபனத்தின் பேரில் கூடி தமது பிரச்னைகளை ஆராய்ந்து விபரங்களை தாய்ச்சங்கத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும், தாய்ச சங்கத்தி[illegible] கான குழுக்களை அமைக்க [illegible] பட்டுள்ளது. இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்ட பின்னரே அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

## 2 சோவியத் அதிகாரிகளுக்கு வெளியேற உத்தரவு

புதுடில்லி, செப்டெம்பர் 3

இலங்கையிலுள்ள இரு சோவியத் தொழிற்சங்கவாதிகளை திங்கட்கிழமைக்குள் நாட்டை விட்டு வெளியேறும்படி இலங்கை அரசு உத்தரவிட்டிருப்பதாக இந்திய வானொலி இன்று அறிவித்தது.

இலங்கையில் ஏற்பட்ட அண்மைக்கால வகுப்புக்கலவரங்களுக்கு வெளிநாட்டுத் தூண்டுதல் இருந்துவந்ததாக இலங்கைப் பத்திரிகைகள் முன்பு செய்தி வெளியிட்டிருந்ததாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டதுடன் மேற்படி இரு சோவியத் தொழிற்சங்க வாதிகளும் சில தோட்டப்பகுதி தொழிற்சங்களுடன் தொடர்புகொண்டிருந்ததாகவும் தெரிவித்தது

## நயினாதீவுக்கு பொலிஸ் அதிபர் விஜயம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

நயினாதீவுக்கு யாழ். பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், பொலிஸ் அதிபர் திரு பம்பரண்ட ஆகியவர்கள் நேற்று விஜயம் செய்து நிலைமையைஅவதானித்தனர்.

நயினாதீவு விகாராதிபதி வண. சிறிதர்மகீர்த்தி தேரோவையும் அவர்கள் சந்தித்தனர்.

தாம் 30 வருடங்களுக்கு மேலாக இங்கு இருந்து வருவதாகவும், தமக்கு எதுவித ஆபத்துமில்லை யென்றும் தேரோ பொலிஸ் அதிபர்களிடம் தெரிவித்தார். நயினாதீவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமயதலமாக இருப்பதால் அங்கு எதுவித அசம்பாவிதமும் ஏற்படமாட்டாது என்றும் தெரிவித்த வண தர்மகீர்த்தி தேரோ, தமிழ் மக்கள் மத்தியில் சிங்களவராகிய தாம் அமைதியாக இருப்பது போல் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழ் மக்களும் பாதுகாப்பாக இருப்பதற்கு சிங்கள மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார் அவர் தெரிவித்தவைகளையும் தாம் நேரில் பார்த்தவைகளையும் பொலிஸ் அதிபர் மேலிடத்துக்கு தெரிவித்துள்ளார், நயினாதீவில் ராணுவம் காவல் புரிந்து வருகின்றது.

## நாளை ரதோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

## இயக்கச்சியில்நடந்தசம்பவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இயக்கச்சியில் நேற்றுக்காலை பஸ் சாரதி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். உடனடியாக இவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாத்தளைக்குச் சென்ற இந்த பஸ்ஸை 179-ம் கட்டையடியில் பஸ்ஸில் சென்ற 3 இளைஞர்கள் துப்பாக்கி முனையில் மறிக்கச்சொன்னதாகவும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்ததாகவும் இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது.

காயமடைந்த பஸ் சாரதி, பஸ் கண்டக்டரின் உதவியுடன் ஆனையிறவிற்கு பஸ்ஸை ஓட்டிச்சென்றதாகவும், அங்கிருந்து சாரதி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாரென்றும் இச்சம்பவம்பற்றி கூறப்படுகிறது. சாரதி ஆபத்திலிருந்து தப்பிவிட்டாதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள பஸ் சாரதியை பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் இதர உயர் பொலிஸ் அதிகாரிகளும் ஊழியர்களும் சென்று பார்த்தனர். பலத்த பொலிஸ் பந்தோபஸ்து ஏற்படுத்தப்பட்டுள்ளது. இ.போ.ச. ஊழியர்கள் சாரதியின் நலனில் காட்டிய ஆர்வத்தை பொலிஸ் அதிபர் பாராட்டியுள்ளார்.

சாரதியின் நிலைமைபற்றி மாத்தளை பாராளுமன்ற உறுப்பினருக்கும் அப்பகுதி பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொலிஸ் அதிபர் அறிவித்ததுடன் அங்கு வதந்திகள் பரவாதவகையில் ஏற்பாடுசெய்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் அமைதி திரும்பிக்கொண்டிருக்கும்இவ்வேளையில் இவ்வாறு சிறுசிறு சம்பவங்கள் நடைபெறுவது வெளிமாகாணங்களில் உள்ள தமிழர்கள் பாதிக்கப்படக் கூடிய நிலைமையை மேலும் உருவாகலாம் என்று பொலிஸ் மேலிடம் கவலை கொண்டுள்ளது.

அமைதியைக் குலைப்பதற்கு சில சக்திகள் வேண்டுமென்றே முயல்வதாக பொலிசார் கருதுகின்றனர்.

## முன்னாள் பாக். பிரதமர் பூட்டோ கைது!

இஸ்லாமாபாத், செப் 3

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோ இன்று அதிகாலை பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தமது ஆட்சிக்காலத்தில் நடந்த சில கொலைகளுக்கு காரணமாக இருந்தார் என்பதற்காகவே ஜனாப் பூட்டோ கைதுசெய்யப்பட்டார் என்று இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவித்தன.

லாகூர் மேல் நீதிமன்றத்தில் உள்ள இரு வழக்குகள் தொடர்பாகவே இவர் கைது செய்யப்பட்டார் என்று இராணுவ அரசு தெரிவித்தது.

அதிகாலை 4 மணிக்கு தமது வீட்டில் வைத்து ஜனாப் பூட்டோ கைதுசெய்யப்பட்டார். கடந்த ஜூலைமாதம் 5-ம் திகதி இராணுவப் புரட்சியின்போது இவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு பின்னர் விடுதலைசெய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

## அகதிகளுக்கு ரூ. 15 ஆயிரம் புடைவை அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் ஏற்பட்ட கலவரங்களினால் தமது உடைமைகளை இழந்து வட பகுதிகளிலுள்ள அகதிகள் முகாம்களில் தஞ்சம் புகுந்தவர்களுக்கு யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ரூபா 15,000 ரூபா பெறுமதியான புடவை வகைகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

இவ்வன்பளிப்புப் பொருட்களை மேற்படி சங்கத் தலைவர் திரு. எஸ். விஸ்வலிங்கம் பொதுமுகாமையாளர் திரு. எஸ். செல்வரத்தினம் ஆகியோர் யாழ். சமூகசேவைப் பகுதியூடாக அகதிகளுக்கு ஒப்படைத்தனர்.

மேற்படி சங்கத்தினது ஊழியர்கள் மாதா மாதம் தமது ஒரு நாள் சம்பளத்தை இவ்வகதிகளின் புனர்வாழ்வு நிதிக்கு வழங்கவும், ஆகக்குறைந்தது இரு குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. [இ]

கப்பலில் வேலை

RADIO OFFICER

National Institutes பயிற்சிகளுக்கு 2-ம் பக்க விளம்பர இல: 6943 ஐ பார்க்கவும்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கனகலிங்கம் சுருட்டுக்கள்: தற்காலிகமாக கனகலிங்கம் சுருட்டுக்களை தொகையாகவும், சில்லறையாகவும் பி. எஸ். டிஸ்பென்ஸரியில் (பஸ் நிலைய முன்பாக) பெற்றுக்கொள்ளலாம். பி. எஸ். டிஸ்பென்ஸரி, யாழ்ப்பாணம். 6935

நல்ல நிலையிலுள்ள லிஸ்ரர் (Lister) HA2-19H.P யந்திரம், 10 K W டைனமோ மற்றும் லைற் சாமான்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆர். ஞானசுந்தரம், நெடியகாடு, வல்வெட்டித்துறை. 6966

கிளிநொச்சிப்பகுதியில் பதினைந்து ஏக்கர் நல்ல விளைச்சலான நெல் வயல்கள் விற்பனைக்குண்டு. இரு போகமும் முழுவதும் விதைக்கக்கூடிய தனிக் குளத்தண்ணீர் வசதி, பஸ் போக்குவரவு வசதிகளுடன். 19, கடைச்சாமிவீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 6952

அக்காய் 1710 L ரேப்றெக்கோடர் இரு ஸ்பீக்கர்களுடன் 8" பிலிப்ஸ். விபரங்களுக்கு: விஜயரத்தினம், 39/2. பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 6948

பற்றிக்ஸ் வீதியில் 4 1/2 பரப்பில் புதிய வீடு நவீன வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு 115, நொத்தார் தேட்டம், பொன்னம்பலம் வீதி, அரியாலை 6970

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பரியோவான் கல்லூரிகளுக்கு அண்மையில் 58 ம் இலக்கத்தில் 4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு 2-ம் இலக்கம், ஈச்சமோட்டை, பீற்றரிடம் தொடர்புகொள்ளவும். 6932

வவுனியா - மன்னார் வீதியில் நல்ல கேந்திர நிலையத்தில் (17ம் கட்டையில்) 30 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு பயிர்ச் செய்கைக்கோ மில் (அரிசி ஆலை) ஸ்தாபிக்கவோ சிறந்த இடம். தொடர்பு கொள்க. ஆனந்தா ஸ்டோர்ஸ், உயிலங்குளம். 6949

## தேவை

பாம்கோட் ஹோட்டலுக்கு வரவேற்பாளர் / உதவி மனேச்சர் தேவை. ஹோட்டலில் பல்வேறு துறைகளில் அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பம் ஆங்கிலத்தில் தமது சொந்தக்கையெழுத்தில் எழுதி அனுப்பவேண்டும். பிணை ரூபா 2500/- சம்பளம் ரூபா 200/-க்கும் ரூபா 250/-க்கும் இடையில். மற்றும் விசேடபடிகளும். விண்ணப்பிக்குக: பாம்கோட், பிரதான வீதி, யாழ்ப்பாணம். 6973

## தேவை

பிடவை வியாபாரத்தில் ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம் உள்ள ஆண் விற்பனையாளர்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன் சன், 48-50, பெரியகடை, யாழ்ப்பாணம். 6960

## வைத்தியம்

சிறுநீர் மஞ்சளாகவோ சிவந்தோ நிறம்மாறிப் போனாற் செங்கமாரி, கல்லீரலைப் பாதிக்கும் இந்நோய் முறிவுற்று முதிர்ந்தால் ஆபத்தானது. எந்நிலையிலும் இதனைக் குணப்படுத்திக் கைதேர்ந்தவர். சிறுபிள்ளைகள் வலி திரும்பிவராமற்குணப் படுத்துவார். காலவியல், தலைவலியல், கபால இடி, சிரங்கு, குட்டம், தொய்வு, குன்மம், மாதவிடாய்கால வயிற்றுவலி, அற்புதமாகக் குணப்படுத்தப்படும். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் வங்களாவடி, வேலணை. (6888)

## இலவசம்

"வேல்களையே வெல்லும் வேல்" சிவனொளி மலையின் கொடுமுடியில்! இருபதாம் நூற்றாண்டின் வெற்றி மத்திய கிழக்கில் நிர்ணயிக்கப்படுகின்றதா? இலவச விபரங்களுக்கு! த. இ. இன்பநாதன் சரசாலை, சாவகச்சேரி. 6811

## வகுப்புக்கள்

விம்ஸ் தையல் நிலையம் விஞ்ஞான முறையில் ஆடை தயாரிக்கும் வகுப்புக்கள் கதலீன், கிளார்மென்ட் பாடசாலைகளில் தராதரமும், பயிற்சியும் பெற்ற ஆசிரியர்களால் நடாத்தப்படும். விபரங்களுக்கு 14, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம். 6868

யாழ்ப்பாணக் கல்வி நிலைய G. C. . (O/L A/L) காலை, மாலை வகுப்புக்கள் 5 - 9 - 77 இல் ஆரம்பமாகும். 22. இராமையா செட்டியார் லேன். யாழ்ப்பாணம். 6961

## CLASSES

Vims Hairstylists conduct classes in Hairdo and Beauty culture. Apply 14, Clock Tower Rd , Jaffna. 6969

I.C.M.A., November 1977 Rapid Course. Commences on 10-9-77 at 1-30 P.M. The Jaffna Education entre, 22, Ramiah Chettiar Lane, Jaffna. 6962

## காணவில்லை

எனது தந்தையாரும் முன்னை நாள் யாழ்ப்பாணம் சிங்கப்பூர் கபே உரிமையாளரும், புங்குடுதீவு 3-ம வட்டாரத்தைச் சேர்ந்தவருமான சோமசுந்தரம் வேலாயுதம் என்பவரை 18-8-77 முதல் காணவில்லை. கடைசியாக வவுனியாவில் காணப்பட்டார். பொதுநிறமும் மொட்டையான தலையும் உடையவரான இவர் 6 அடி உயரமும் 77 வயதினருமாவார் சடைசியாக சாரமும் துவாயும் அணிந்திருக்கக் காணப்பட்டார், வே தவராஜலிங்கம். கோண்டாவில் என்ற முகவரிக்கு தகவல் தருவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். 6918

## பயிற்சி

வெளிநாடுகளில் வேலைகள் பெற அரசாங்கத்தால் தனியார்துறை தொழிற்பயிற்சி நிலையமென அத்தாட்சிபெற்ற இலங்கையின் ஓரே தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுங்கள், வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), மோட்டார் மெக்கானிசம், PMG Certificate, City & Guilds. விபரங்கள் இலவசமாக அனுப்பப்படும். National Institutes மைற் மண்டபம், 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6943

# தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்

எல்லா அகதிகளும்-அகதிகள் முகாமில் இருந்தவராயினும், இருக்காதவராயினும் அவர்களது மறு வாழ்வுத் திட்டங்களை வகுப்பதற்கு வசதியளிக்கும் முகமாக தத்தமது தற்போதைய முகவரிகளை உடனடியாக எமக்கு அறிவிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

கே. சி. நித்தியானந்தா
தலைவர்

17, அல்பிரட் பிளேஸ்,
கொழும்பு- 3.
தொலைபேசி-31106

6978

# தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்

தத்தமது தொழிலினின்றும் விலகிச் சென்று மீண்டும் திரும்பிச் செல்லமுடியாதிருக்கும் எல்லா தரங்களிலுமுள்ள ஊதியம்பெறும் எல்லோரும் பின்வரும் தகவல்களைத் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

பெயர்:
அஞ்சல் முகவரி:
குடும்பம், அண்டியிருப்போர் பற்றிய விபரம்:
தொழிற்தன்மையும்,
தொழில் பார்க்கும் இடமும்:
தொழில் தருநரின் பெயர்:
சப்பளம் (எல்லாமாகச் சேர்த்து):

கே. சி. நித்தியானந்தா
தலைவர்

17, அல்பிரட் பிளேஸ்,
கொழும்பு 3.
தொலைபேசி 31106

6979

எமது ஈழத் தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்ட சகலவிதமான கைத்தறிப்புடைவைகளும். வெள்ளைப் பப்பிளின், நிறப்பப்பிளின். அச்சிடப்பட்ட சீத்தை. பொலியஸ்ரர் சேட்டிங். சூட்டிங் முதலிய மின்தறிப்புடவைகளையும்

**'புதிய கட்டுப்பாட்டு விலையில்'**

பெற்றுக்கொள்ள
நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய இடம்

**யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்**

176, பிரதான வீதி — யாழ்ப்பாணம்


கிளைகள்: சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, பளை, சித்தங்கேணி, வேலணை.

மொத்தமாக கொள்வனவு செய்ய விரும்பும் புடவை வியாபாரிகள்

10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில்

உள்ள எமது தலைமைக்காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொலைபேசி: 326

6964




கூடிப் பேசி வாழும் குடும்பம்
கோடி இன்பம் சூழும் குடும்பம்

இல்லம் சிறக்க, உள்ளம் களிக்க, பிள்ளைகள் சுகமாய்த் துள்ளித்திரிய, நாளை அவர்கள் நலமெலாம் எய்த, கணவன் மனைவி கலந்து பேசி, இடைவெளி விட்டுக் குழந்தை பெற வேண்டும். உனக்கு நான், எனக்கு நீ என்று ஒருவரோடொருவர் ஒத்துப் பேசிக் குடும்பத்திட்டம் செய்து குதூகலமாய் வாழுங்கள்.

எல்லா விபரங்களையும் இலகுவாய் விளக்கும் குடும்பத்திட்டப் பிரசுரங்களை இலவசமாய்ப் பெற இந்தக் கூப்பனை நிரப்பி, கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்புங்கள்.

பெயர்:....................................

விலாசம்:..................................

BE/B/1

இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கம்
37/27 புள்ளர்ஸ் ஒழுங்கை த. பெ. எண் 365 கொழும்பு 7 தொலைபேசி: Alwis

# நெஞ்சம் மறப்பதில்லை

''அவரை நான் சந்தித்திருக்கவே கூடாது. பார்த்தும் பார்க்காததுபோல் வந்திருக்கலாம்.

அப்படி வந்திருந்தாலும் பார்த்ததுதான் பார்த்தோம். ஒருதடவையாவது சுகம் விசாரிக்காமல் வந்துவிட்டேனே என்று கவலைப்படவேண்டியிருக்கும்.

இப்போது மட்டுமென்ன?

இத்தனை வருடம் கழித்து ஏன்தான் ஊருக்குப் போனேனோ!

இப்படி ஏன்தான் என் மனம் அல்லல்படுகிறதோ!

மனம் ஒரு குரங்கு என்று சரியாய்த்தான் சொன்னார்கள்!''

ஊருக்குச் சென்று திரும்பிய கமலம் இரண்டு நாளாக நிம்மதியில்லாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

இருபது வருடங்களுக்கு மேலாக ஊர்ப்பக்கமே போகாமலிருந்த கமலம் காணித் தகராறு காரணமாக கட்டாயம் ஊருக்குப்போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

தான் பிறந்து வளர்ந்த ஊர்தான் என்றாலும் அதை நினைத்தாலே அவளுக்கு ஒரு வெறுப்பு.

விருப்பமில்லாமலேயே அவள் அங்கு சென்றாள். சீதனமாகக் கொடுத்த காணியை யாருக்கோ பறிகொடுத்துவிட அவள் கணவன் விரும்புவானா!

கமலத்தின் அக்காவும் புருஷனும் அந்தக்காணியில் உரிமை கொண்டாடி அதை அபகரித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள் என்று தகவல் கிடைத்ததும் கமலத்தின் புருஷன் ஆத்திரமடைந்தான்.

''அந்தக் காணி இருந்தும் ஒன்றுதான் இல்லாமலும் ஒன்றுதான். அடுத்த காணிக்காரன் முன்னரே அதை விலைக்குக் கேட்டபோது கொடுத்திருக்கலாம். இப்போதுதான் என்ன, நீ போய் என்ன விலைக்கென்றாலும் அந்தக் காணிக்காரனோடு பேசி முடித்து உன்னுடைய அக்காவுக்கும் அத்தானுக்கும் சொல்லிவிட்டுவா'' என்று கமலத்தை அனுப்பி வைத்தான் அவள் புருஷன்.

கமலம் ஊரில் காலடி எடுத்துவைத்ததுமே காணியைப்பற்றியசிந்தனை மறைந்துவிட்டது.

இருபது வருடங்களுக்குமுன் நடந்த நிகழ்ச்சிகள் அவள் மனத்திரையில் ஒவ்வொரு காட்சியாகத் தோன்றத் தொடங்கின.

0 0 0

''இந்த ரோட்டு இன்னமும் அப்படியேதானிருக்கிறது. ஆக இதிலை புதியதாக ஒரு மேல்வீடு மட்டும் வந்திருக்கு. முத்தையரின் கிடுகுவேலி இல்லை. சுற்றுமதில் கட்டியிருக்கிறார்.

இந்த ஒழுங்கையும் அப்படியேதான் இருக்கு.

பாவம் கண்ணன்!

அவர் இங்கைதானே இருப்பதாகக் கேள்வி!

நான் வந்திருப்பது தெரிந்தால் எப்படியும் இந்தப் பக்கம் வராமல்விடமாட்டார்.

இந்த ஒழுங்கை மூலையில் அவர் சைக்கிளில் வந்து மணியடிப்பதும் நான் ஓடிவருவதும்... எப்படி விளையாட்டாகத் தொடங்கிய சந்திப்பு!

கண்ணன் இப்பொழுது எப்படி இருக்கிறாரோ! போவதற்குமுன் அவரை ஒரு தடவை பார்க்கக்கிடைத்தால் போதும்''

0 0 0

''கமலம்; கமலம்'' என்று அழைத்தபடியே அவளின் அக்கா வீட்டுக்குள் நுழைந்தபோதுதான் கமலம் பழைய நினைவிலிருந்து விடுபட்டாள்!

''என்ன அறிவிக்காமல் கொள்ளாமல் திடீரென்று வந்து நிற்கிறாய். தம்பி கூட எனக்கு நீ வாறதாய்ச் சொல்லவில்லை'' என்று மூச்சுவிடாமல் பேசத்தொடங்கி விட்டாள்.

இப்போதுதான் கமலத்துக்குத் தான் வந்த காரியம் நினைவுக்கு வந்தது.

''காணியை விற்கப்போறோம். அதுதான் அடுத்த காணிக்காறன். முந்தியே கேட்டவன் என்பதால் அவனோடு விலையைப் பேசி முடிச்சுக்கொண்டுவரச் சொல்லி என்னை அனுப்பினார்'' என்றாள் கமலம்.

இருக்கிற காணியையும் வித்துப்போட்டு நாளைக்குப் பிள்ளை குட்டியளுக்கு என்ன செய்யப்போறீங்கள் என்று அக்கா புத்திமதி சொல்ல ஆரம்பித்ததும் ''அது இருந்தும் பிரயோசனமில்லைத் தானே'' என்று கமலம் வெடுக்கென்று பதில் சொன்னாள்.

அக்காவுக்கு இது பிடிக்கவில்லை.

பக்கத்துக் காணிக்காரன் அதிலை உரிமைகொண்டாட வெளிக்கிட்டுபோன மழைக்குள்ளை எல்லைக்கதிகால்களை தள்ளிப்போடப்போக நானும் அவரும் அவனோடை சண்டை பிடிச்சு இப்ப மடங்கிப் போயிருக்கிறான்'' என்று அக்கா சொன்னதுடன் ''நீங்கள் யாராவது அடிக்கடி வந்து காணியிலே நின்று போகவேணும்; கொழும்பிலேயே இருந்துவிட்டால் காணியாலை என்ன பிரயோசனம்'' என்று சூடாகச் சொன்னாள்.

கமலம் சாந்தமடைந்தாள். விபரத்தைத் தெரிந்துகொண்டதும் இனி அதை ஏன் விற்பான். அதுவும் அவனுக்கு விற்கக்கூடாது'' என்று முடிவாகச் சொன்னாள்.

''வந்தவேலை முடிஞ்சுது. அப்ப நாளைக்கே திரும்பலாம்'' என்று கமலம் கூறியபடியே தெருவை எட்டிப் பார்த்தாள்.

வந்த நீ இரண்டு நாளைக்கு நின்டுபோவன் என்று சொல்லிய அக்கா ''வீட்டுக்கு வர நான் சாப்பாடுசெய்துவைக்கிறேன்'' என்று போய்விட்டாள்.

காணிப்பிரச்னை முடிந்துவிட்டது.

கமலத்துக்குக் கண்ணனின் எண்ணமே இப்போது நிறைந்திருந்தது.

இடையிடையே தனது கணவனையும் பிள்ளைகளையும் நினைத்துக்கொள்ளும்போது உடனேயே கொழும்புக்குத் திரும்பவேண்டுமென்றும் நினைப்பாள்.

குளித்து உடை மாற்றிக் கொண்டு அக்கா வீட்டுக்குப் புறப்படுவதற்காக வெளியே கால் வைத்த கமலம் இருபது வருடங்களுக்கு முன் பள்ளிக்கூடத்துக்குப் போவதற்கு வெளியே வந்ததும் பார்க்கும் அதே மூலையை அவளை அறியாமலேயே பார்த்தாள்.

கண்ணன்தான்!

அவள் மெய்சிலிர்த்தது!

அவன், அதே பார்வை!

0 0 0

இரண்டு நாட்கள்தான் அவள் தங்கியிருந்தாள்.

இரண்டு மூன்று தடவைகள் கண்ணனைச் சந்தித்தாள்; பேசினாள்.

''இனியும் ஊரிலிருப்பது நல்லதல்ல.''

அவள் புறப்பட்டுவிட்டாள்.

0 0 0

''மனம் ஒரு குரங்கு என்று சரியாகத்தான் சொன்னார்கள். ஏன்தான் எனது மனம் இப்படி அல்லல்படுகிறதோ?

இத்தனை வருடங்கள் கழிந்தும் இப்படியான ஒரு நிலையில்லாமல் தவிக்கவேண்டும். சே! நான் அவரைச் சந்தித்திருக்கவே கூடாது.

ஊருக்குப்போனதும் அவரை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று மனம் உந்தியதுஉண்மைதான்'' பார்த்ததுதான் பார்த்தேன்.

பார்த்தும் பார்க்காததுபோல் போயிருக்கலாம்.

பாழும் மனம் கேட்கவில்லை. ஏன்தான் அவரைநேருக்கு நேராகப் பார்த்தேனோ?

நான் அவரைப் பார்த்ததால் தானே அவர் என்னை; ''எப்படி சுகமாயிருக்கிறீரா?'' என்று கேட்டார்.

''சுகமாயிருக்கிறேன்'' என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம்!

அதெப்படிப்போவது! அது மரியாதையில்லையே!



மரியாதையில்லையா? முன்பின் தெரியாதவரா அப்படிச் சொல்வதற்கு!

நான்தான் அவர்; அவர்தான் நான் என்றிருந்தவர்களல்லவா நாங்கள்.

நானில்லாமல் அவரில்லை; அவரில்லாமல் நானில்லை என்றிருந்த நாங்கள் இப்போது நான்யாரோ அவர் யாரோ என்றிருந்தாலும் பல வருடங்களுக்குப்பிறகு சந்தித்தபோது ஒன்றுமேயில்லாத மாதிரி எப்படிப்போகமுடியும்?

நாங்கள் என்ன மறுபிறவியா எடுத்திருக்கிறோம்.

''எப்படிச்சுகமா?'' என்று அவர் கேட்டபோதே அவர் கண்கள் கலங்கிவிட்டதே!

பாவம்! என்னைப் பார்க்க வேண்டுமென்ற அங்கலாய்ப்பு அவருக்கு இருந்திருப்பதை அன்றுதான் நன்றாக அறிந்து கொண்டேன்.

எனக்கே அவரை ஒருதடவையாவது பார்க்க வேண்டுமென்ற துடிப்பு இருந்ததென்றால் அவருக்கு எப்படியிருந்திருக்கும்.

''என்னைவிட அவருக்குஐந்து வயது அதிகம். ஆனாலும் இத்தனை வருடங்களுக்குப் பிறகும் அவரிடம் அதிக மாறுதலைக் காணவில்லை.

பேச்சில் கூட அவரிடம் அதே பழைய குறும்பு மறையவில்லை.

''என்ன உமக்குத் தலை கூட நரைத்து விட்டதே! ஓமோம். நீர் இப்ப பெரிய மனுஷி, பெரிய குடும்பம் பெரிய பொறுப்பு...'' என்று சொல்லிவிட்டு என்னமாதிரி உச்சிமுதல் உள்ளங்கால்வரை என்னை நோட்டம் விட்டார்

நான் சும்மா இருக்கக் கூடாதா, ''நீங்களும் இப்ப பெரிய மனிதர்தானே''

என்று ஏன்தான் கேட்டேனோ?

'நான் இன்னும் அதே சின்ன மனிதன்தான். நான் பெரிய மனிதனாக இருந்தால் நீர் யாரோ நான் யாரோ என்ற நிலையில் இப்படி நடுத்தெருவில் நின்று பேசிக்கொண்டிருப்போமா?'' என்று அவர் சொன்னபோது அவருடைய உள்ளம் அழுவதைக்கண்டு என் உள்ளம் உருகியதை அவர் அறிந்திருப்பாரா!

உணர்ந்துகொண்டபடியால் தானே அவர் கதையைமாற்றி,

**''காதலிக்காமலிருப்பதைவிட காதலித்து இழப்பதுமேல்''** என்று யாரோ ஒரு அறிஞன் சொன்னதாகக்கூறிச் சமாதானப் படுத்த முயன்றார்.

இப்படி அவர் தன்னையே சமாதானப்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்!

அந்தநாளில் எங்களைப்பார்த்துப் பொறாமையும் எரிச்சலும் கொண்டு கதைகட்டியவர்களில் சிலர் அன்று அந்தப் பாதையால் வந்தபோது, நீர் வாழும் உலகம்வேறு; நான் இன்னமும் அதே பழைய உலகத்தில்தான் வாழ்கின்றேன். இந்த உலகம் இன்னும் அதே நிலையில்தான் இருக்கிறதென்பதை மறந்துவிடாதேயும்'' என்று எவ்வளவு நாசூக்காகச் சொன்னார்.

ஏன் நீங்களும் புதிய உலகத்திலவாழமுடியாதா? என்று நான் தெரியாத்தனமாகக் கேட்க, அவர் ''பழைய உலகிலிருப்பதால்தானே பழைய இனிய நினைவுகளில் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்'' என்று எத்தனை அர்த்தத்துடன் பதில்சொன்னார்.

நான், அவர் நினைப்பது போல் வேறு உலகத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.

ஆனால் அந்தப் பழைய இனிய நினைவுகள் இன்னும் என் உள்ளத்தில் பசுமையாகத் தானிருக்கின்றன.

---

**ஸ்ரீரங்கன்**

---

அந்த இனிய நினைவுகளிலேயே நான் என் துன்பங்களையெல்லாம் மறந்துவாழ்கிறேன் என்பது அவருக்கு எங்கே தெரியப்போகிறது!

யாருக்குமே தெரியவேண்டாம். எனது இன்பமும் துன்பமும் என்னுள்ளேயே, என்னுடனேயேஅடங்கி, மறைந்து போகட்டும்.

''உங்களை ஒருதடவையாவது பார்க்கவேண்டுமென்று விரும்பினேன். அதை நீங்கள் விரும்பமாட்டீர்களோ' என்று நினைத்து உங்களைப் பார்க்கத் துணியவில்லை'' என்று அவர் என்னிடம் சொன்னபோது ''நானும் உங்களைப் பார்ப்பதற்காகவே வந்தேன்'' என்று நான் எப்படிச் சொல்லமுடியும்.

அவர் பொல்லாதவர் இதை விளங்கிக்கொண்டுதான் பிறகு, ''பெண்கள் எதையும் சுலபத்தில் மறந்துவிடுவார்கள்; எதையும் மறைக்கத் தெரிந்தவர்களும் அவர்கள்தான்'' என்று சொன்னார்போலும்.

'நீங்கள் இப்பொழுது நன்றாகக் குடிக்கிறீர்களாமே!''

இந்தக் கேள்வியை நான் ஏன்தான் கேட்டேனோ!

''ஆமாம் –

''யார் சொன்னது?''

''சொன்னவர்களெதற்கு!''

''இவர்கள்தான் முன்பு எதையோவெல்லாம் சொல்லி நாங்கள்கட்டிய மலக்கோட்டைகளை உடைத்தெறிந்தவர்களாக இருக்கவேண்டும்.

''இன்னும் அந்தப் பழைய வைகளையே நினைத்துக்கொண்டிருக்கலாமா?''

''ஓம்; ஓம். அது பைத்தியக்காரத்தனம்தான். பெண்களால் எதையும் மறக்க முடிகிறது; மறைக்கவும் தெரிந்தவர்கள்; ஆனால் என்னால்தான் அது முடியவில்லை.

''நினைத்தால் முடியும்?''

''நினைத்ததுதான முடியாமல் போய்விட்டதே''

எத்தனை அர்த்தம்!

அந்தச்சமயம் அவர் கண்கள் கலங்கியதை இப்போது நினைத்தாலும் ஓவென்று அழவேண்டும் போலிருக்கிறது.

''மறப்பதற்காகத்தான் குடிக்கத் தொடங்கினேன்; இன்று பழையவைகளையும் மறக்கமுடியவில்லை; குடியையும் மறக்க முடியவில்லை.

பாவம்! எப்படி இருந்தவர். அந்தநாளிலேயே அவருடைய வயதையொத்தவர்கள் சிகரட்டும் மதுபானமும் பாவித்துக் கொண்டு வீதிகளில் திரிந்தபோது இவர்மட்டும்தானே ஊரிலேயே நல்லபிள்ளைப் பெயர் எடுத்தவர்.

என்னால்தானே அவருக்கு இந்தநிலை ஏற்பட்டது!

''எனக்காகவாவது குடியை விட்டாலென்ன?'' என்றுநான் கேட்டதற்கு அந்தக் குறும்பக்காரர், ''நான் அதை விடுகிறேன்; நீ என்னுடன் வந்துவிடுகிறியா?'' என்று கேட்டு என்பதிலை எதிர்பாராமலே இப்படித்தான் தேவதாஸும் கேட்டான் ''அதெப்படி நடக்காதோ அதுபோல்தான் இதுவும்'' என்று அவன் சொன்னதையே நானும் சொல்கிறேன்'' என்று மடக்கிவிட்டார்.

''நீங்களும் தேவதாஸ் என்று நினைத்து நடந்து கொள்கிறீர்கள்'' என்று நான் கேட்க நினைக்கவேயில்லை.

அவர் எப்படித்தான் இப்படியெல்லாம் சிந்திக்கிறாரோ தெரியவில்லை.

''நான் என்னைத் தேவதாஸ் என்று நினைத்துக்கொள்ளவில்லை. நான் தேவதாஸ் போன்ற நிலையிலிருந்திருந்தால் உம்மை எப்பொழுதோ என்னுடையவளாக்கியிருப்பேன்''.

அவர் மனப்புண் ஆறுமென்று நான் நினைக்கவில்லை.

என்நினைவாகவே அவர் இருக்கிறார். ஊராருக்கும் இது தெரியும்.

ஊரார்! அவர்களால்தானே இந்தக்கேடு!

அவர் சொல்வதுபோல் இப்போதுதானே, அவருக்காக அவர்கள் அனுதாபப்படுகிறார்கள்!

இன்னும் சில நாள் நான் அங்கு தங்கியிருந்து மேலும்

(7-ம் பக்கம்பார்க்க)



# நமது தமிழ்த் திரைப்படங்கள் அரங்குகளை விட்டு ஓடுவதேன்?

**[திரைப்படக் கூட்டுத்தாபனத்தாருக்கு கட்டுரையாளர் ஒரு யோசனை கூறுகிறார். இதைச் செய்து பார்த்தால் என்ன?]**

திரைப்படத்துறையில் ஈழம் வெகுவாக முன்றேறியுள்ளதென்பதை வெளிநாட்டாரும் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும் சாதனங்கள், வசதிகள் குறைவாக இருந்த போதும் நம்மவர்கள் இவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்களென்றால் இவர்கள் காட்டும் ஆர்வமும் திறமையுமே காரணமாகும்.

நீண்டகால அனுபவத்துடன் படிமுறை வளர்ச்சிகண்ட தமிழகப்படத்துறையுடன் ஈழத்தை ஒப்பிட்டுப் பார்க்கலாகாது. அதேபோல் வளர்ச்சியடைந்த சிங்களப்படத்துறையுடன் நமது தமிழ் படத்துறையை ஒப்பிடுவதும் ஒத்துவராது.

இங்கு தயாராகும் சிங்களப் படங்கள் அமோக வெற்றியுடன் ஓடுவதற்குக் காரணம் சிங்களவரின் மொழிப்பற்றுத்தான். அந்நிய மொழிப்படங்களையே பார்த்துக்கொண்டிருக்காமல் தமது மொழியில் படங்களை உருவாக்கி தாமும் முன்னேறவேண்டுமென்றஅவர்களது ஆசைதான் அவர்களை உயர்த்தியிருக்கிறது.

ஆனால்-

நமது தமிழ்மக்கள் இருக்கிறார்களே... இவர்கள் ரசனையைத்தான் சரிவரப் புரிந்துகொள்ளமுடியவில்லை. இவர்கள் மொழிதெரியாத படங்களைக்கூட ஆவலுடன் போய்ப் பார்க்கிறார்கள். ஆங்கிலம்-ஹிந்தி-மலையாளம் – சிங்களம் என்று எதைத்தான் விட்டு வைக்கிறார்கள். கேள்விஞானத்தை மட்டுமே துணைக்கொண்டு அந்தப் படங்களில் வருகிற சில படங்களைக்கூட முணுமுணுத்துத் திரிகிறார்கள். இவர்களுக்கு அந்தப் பாடலின் அர்த்தம்கூடப்புரியாது. ஆனால் அழகாகப் பாடுவார்கள்; கேட்டு ரசிப்பார்கள்.

ஏறத்தாள நான்கு மாதங்களுக்குமுன் என்னோடு நெருங்கிப் பழகிய சில நண்பர்கள் ஒரு சிங்களப் படத்தைப் பார்த்துவிட்டு வரும்போது அந்தப் படத்தில் உங்களுக்கு என்ன விளங்கியது என்று கேட்டேன்.

'அவங்களின் ரைபடப்பிடிப்பு என்ன அருமையா இருக்கு மச்சான்.'

'என்னமாதிரிச் சண்டை போடுறான்களப்பா'

'அப்பிடியே யதார்த்தமாய் எடுத்திருக்கிறான்கள்.'

'எங்கடை தமிழ்ப்படங்கள் ஒரு சதத்துக்குதவாது'

இப்படி என்னென்னவோ எல்லாம் சொன்னார்கள். ஒருவராவது அந்தக்கதை எப்படிப் பட்டது...அது சொல்கிற கருத்தென்ன என்பதைச் சொல்லவில்லை. இன்னமும் சுருங்கச் சொன்னால் இந்த நண்பர்களில் ஒருவருக்குக்கூட 'யதார்த்தம், என்றால் என்னவென்று புரியாது. இப்படி ஒரு கட்டுரையை எழுதுகிறேனே... இதைக்கூட இவர்கள்படித்துப் பார்க்கமாட்டார்கள்.

தமிழ்ப்படங்கள் என்றால் அது தென்னிந்தியாவுக்கு மட்டுமே சொந்தம் என்று கருதும் இவர்கள், ஆசைக்காகத் தானும் நம்மவர் படங்களைப் பார்ப்பதில்லை. எமது படங்கள்கூடாது என்பதுதான் இவர்களது சித்தாந்தம்.

தென்னிந்தியத் திரைப்படங்கள் பலவற்றை நானும் பார்த்திருக்கிறேன் அண்மைக்காலங்களில் இங்கு திரையிடப்பட்ட படங்களில் இரண்டொன்றைத் தவிர எதுவுமே மனதைக் கவரவில்லையே கதையே இல்லாத படங்கள்கூட பிரபல நடிகர்களுக்காக ஓடுகின்றன. பொழுதுபோக்கிற்காகச் சினிமாவுக்குப் போவோமே என்று நினைத்து தியேட்டருக்குள் நுழைந்தால், அதன் பின்னர்தான் மனம் அங்கலாய்க்கும்-எங்காவது வாசிகசாலைக்குப் போயிருக்கலாமேயென்று. தென்னிந்தியாவின் பழைய படங்களில் இருக்கிற சுவையில் ஒருதுளிகூட இன்றைய படங்களில்லையே.

பழம்பெருமை பேசுவதும் பிறர் புகழைத் தம் தலையில் வைத்துக் கொண்டாடுவதும் நம்மவர்களுக்குப் பழகிப் போனஒன்றாகிவிட்டது. இதற்குப் பல உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

எம். ஜி. ஆர். யாரென்றால் அவர் எங்கள் இலங்கையில் பிறந்தவரென்கிறார்கள். சுஜாதாவை எடுத்துக்கொண்டால் எங்கள் நாட்டுப் பெண் அபாரமாக நடிக்கிறாள் என்கிறார்கள். குகநாதனைத் தெரியுமா என்றால் அவன் நம்ம யாழ்ப்பாணத்துப் பையன்தானே... நல்லாய் முன்னேறிவிட்டான் என்கிறார்கள். இப்படி இலங்கைக்குப் புகழ் சேர்ப்பவர் பலரைக்குறிப்பிடலாம் ஆனால் இவர்களெல்லாம் இலங்கையிலேயே இருந்திருந்தால் இவ்வளவு புகழ் பெற்றிருக்க முடியுமா?

இப்படியே,

நமது ரசிகர்கள் தென்னிந்தியப் படங்களில் மூழ்கிக்கொண்டு, அதில் பிரபலமானவர்களையெல்லாம் இலங்கையுடன் தொடர்புடையவர்கள் என்பதால் நம்மவர்கள் என்று தலையில்வைத்துக் கொண்டாடுகிறார்கள். அவர்களது புகழில் பாகியை தமக்கும் சொந்தமாக்கிக்கொள்ளவேண்டுமென்ற அற்ப சுயநலந்தான் காரணம்.

இவ்வாறு ரசிகர்களின் நாட்டம் இந்தியாவை விட்டு அகல்கிறவரையில் ஈழத்துத் தமிழ்த் திரைப்படங்களுக்கு நல்ல காலம் வரப்போவதில்லை.

அண்மையில் இங்கு வெளியாகி ஓடிக்கொண்டிருந்த 'காத்திருப்பேன் உனக்காக' திரைப்படத்தைத்பார்த்தேன். தென்னிந்தியத் திரைவானின் பிரபல நட்சத்திரங்களில் அண்மைக் காலத் திரைப்படங்களுடன் ஒப்பிடுகையில் இது எவ்வளவோ மேலனலாம

அவர்கள் ஓடமுடியாதபடங்களையெல்லாம் கலரில் எடுத்து காசு சம்பாதிக்கிறார்கள். இவர்கள் ஓடக்கூடிய படங்களையே ஓட்டமுடியாமல் அவதிப்படுகிறார்கள்.

'காத்திருப்பேன் உனக்காக' என்ற படம் இதே கலைஞர்களின் கைத்திறனுடன் இந்தியாவிலிருந்து வெளியாகியிருந்தால் நிச்சயமாக ஓஹோ! என்று ஓடிக்கொண்டிருக்கும். கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் ஓடுவது மட்டுமன்றி, நூறுநாள் விழாவையும் கொண்டாடியிருக்கும்.

ஏனெனில்—

இந்தப்படம் இந்தியத் திரைப்படப் பாணியில் எடுக்கப்பட்டிருக்கிறது. இயற்கைக் காட்சிகளுடன் விறுவிறுப்பாக படமாக்கப்பட்டிருக்கிறது. பார்ப்போர் மனதை உருக்கும்படியான பல சம்பவங்களுடன், எதிர்பாராத சில திருப்பங்களும் இருக்கின்றன.

இந்தியாவில் இப்படம் எடுக்கப்பட்டிருந்தால், 'முற்றிறிலும் புதுமுகங்களைக் கொண்ட வெற்றிப்படம்' என்று விருது பெற்றிருக்கும். அதன கஷ்டகாலம், அது இலங்கையில் எடுக்கப்பட்டிருப்பதுதான். இதே கலைஞர்கள் தம்மை ஈழத்தவர் என்று காட்டிக்கொள்ளாமல், இந்தியாவிலிருந்து இப்படத்தை எடுத்து இங்கு வெளியிட்டிருப்பார்களானால் - தேவதாஸ், கல்யாணப்பரிசு, மீண்ட சொர்க்கம் என்ற வரிசையில் இதற்குமோரிடம் கிடைத்திருக்கும்.

இந்தியப் பாணியில் எடுக்கப்பட்ட இந்தப் படமே தியேட்டரைவிட்டு ஓடத் தொடங்குகிறதென்றால்—

நமது கலை. கலாச்சாரம், பண்பாடு என்று சொல்லி யதார்த்தபாணியில்புரட்சியை உண்டாக்குகிறேன் என்று சொல்லி வந்த 'பொன்மணி' மட்டும் எப்படித் தாக்குப் பிடிப்பான்—?

தென்னிந்தியப் படங்களை விரும்பி ரசிக்கும் நம்மவர்களே திக்கற்றபார்வதி, தாகம், போன்ற படங்களை ரசிக்கவில்லையென்றால் - அவர்களது புரட்சிப்படைப்புகளைப் பார்த்துச் சீரணிக்கமுடியாமல் அவஸ்தைப்படுகிறார்களென்றால்-பொன்மணியையும், குத்துவிளக்கையுமா பார்த்துப் பெருமைப்படப் போகிறார்கள்? துலாபாரத்தை- கல்யாணப் பரிசை-தேவதாஸைப் பார்த்துக்கண்ணீர் விட்டவர்கள் பலர், 'காத்திருப்பேன் உனக்காக'வைப் பார்த்துச் சிரிக்கக் கண்டேன். கதையே இல்லாத- நம்பமுடியாத சம்பவங்களைக் கொண்ட தென்னிந்தியப் படங்களைப் பார்த்து ரசிக்கின்ற ரசிகர்கள் இந்தப்படத்தைப்பார்த்துப்பரிகசிப்பதைப் பார்த்தால பரிதாபமாக இருக்கிறது.

காத்திருப்பேன் உனக்காக, சில கட்டங்களில் கண்களைக் குளமாக்கியது.

ஆனால்—

படம் முடிந்து வெளியேறுகையில் ரசிகர் ஒருவர் 'கடைசியிலை நல்லாப் பேய்க்காட்டுறான்கள்' என்று சொல்லி, ஏதோ 'ஜோக்' அடித்தவரைப் போல் அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டு போனார்.

மது அருந்தியவனுக்குத் தேநீரின் சுவை பிடிப்பதில்லையே! அந்த வகையில் நம்மில் பெரும்பாலானோரை மன்னிக்கத்தான் வேண்டும்.

விளம்பரங்கள் விற்பனைக்கு உயிர்நாடி என்பதை எவரும் மறுக்க முடியாது. போதிய விளம்பரமின்மையும் ஈழத்துத் தமிழ்த் திரைப்பட வீழ்ச்சிக்கு ஒரு காரணம்.

தென்னிந்தியச் சினிமாவுக்கென ஒரு பக்கத்தையே ஒதுக்கும் பத்திரிகைகள், ஈழத்துச் சினிமாவுக்கென ஒரு பக்கத்தை என்றைக்காவது ஒதுக்கியதுண்டா—?

நமது திரைப்படங்களின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் வானொலி கூட ஏதுவாகிறது. 'கோமாளிகள்' படம் ஓஹோ என்று ஓடினால் அதற்குக் காரணம் வானொலிதான். வானொலியில் தொடர் நாடகமாக ஒலிபரப்பப்பட்ட கதை என்பதால் மட்டுமே அசற்கு ஒரு தனி மவுசு ஏற்பட்டது அதைப் பார்க்கவேண்டும் என்று மக்கள் ஆர்வத்துடன் ஓடினார்கள். படம் ஓடி முடிந்த பின்னரும் கூட ஒலிச்சித்திரமாக ஒலிபரப்பினார்கள். இந்த வானொலி விளம்பரமே பலரைக் கவர்ந்திருந்தது.

இதே வானொலி காத்திருப்பேன் உனக்காக படத்திற்கு எப்படி விமர்சனம் செய்தது-? படம் வெளியாவதற்கு இரு மாதங்களுக்கு முன்னதாகவே- 'இருப்பேன் உனக்காக...' என்ற பாடலை மட்டும் அடிக்கடி போட்டு விளம்பரம் செய்தது. படத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தக்கூடிய அம்சங்களை நேரத்தோடு ஒலிபரப்பி ரசிகர்களின் ஆவலைத் தூண்டியிருக்கலாமல்லவா-? பொன்மணி படத்திற்கும் இப்படி ஒரு கவர்சசி இல்லாத விளம்பரமே செய்யப்பட்டது. விளம்பரங்கள் மக்கள் மனதைக் கவரும்படியாக அமையவேண்டிய தவசியம். இதை நம் தயாரிப்பாளர்கள் கவனிக்க வேண்டும்.

தென்னிந்தியச் சஞ்சிகைகள் பெருமளவில் இறக்குமதியாவதால்தான் ஈழத்து இலக்கிய உலகம் பாதிக்கப்படுவதாகக் கூறி, இறக்குமதியாகும் சஞ்சிகைகளின் அளவைக் குறைத்தனர் என்பதற்காக,வாசகர்கள் அவற்றை வாசியாமல் விடவில்லை, அதேபோல்-சஞ்சிகைகள் அதிக அளவில் இறக்குமதியாகினவே என்பதற்காக ஈழத்தவர் தமது இலக்கிய முயற்சியைக் கைவிடவில்லை.

திறமைக்கு எங்கிருந்தாலும் மதிப்புக் கொடுக்கப்படவேண்டும். அதுதான் நியாயம்!

ஆனால் இந்த நியாயத்தைப் பலர் ஏற்றுக்கொள்வதில்லை. இதனால்தான் இறக்குமதியாகும் சஞ்சிகைகளின் அளவைக் குறைத்தாவது தம்திறமையைப் பறைசாற்ற வேண்டுமென்று பலரும் விரும்பினார்கள்.

இத்தகைய ஒரு நிலைமையில், இங்குள்ளவர்களின் திறமையையும் மற்றவர்கள் மதிக்கத் தொடங்கிவிட்டாரென்றால், இறக்குமதித் தடையை அகற்றிவிட்டால்கூட பாதிப்பு அதிகம் வந்துவிடாது.

'ராணிமுத்து'வுக்குத் தடை வந்தாலும் வந்தது, இங்கே சில பிரசுரங்களை மக்கள் விரும்பிப் படிக்கத் தொடங்கினார்கள். இனி ராணிமுத்து தடையின்றி வரத்தொடங்கினாற்கூட இந்த வெளியீடுகளுக்குச் சரிவு வருமென்று சொல்வதற்கில்லை.

அரச திரைப்படக் கூட்டுத்தாபனம் திரைப்பட வெளியீட்டிலும் ஒரு புதிய உத்தியைக் கையாண்டு பார்த்தால் அதன் தாற்பரியம் எப்படி இருக்குமென்று ஒரு மதிப்பீடு செய்யலாம். அதாவது - தென்னிந்தியப் படங்கள் ஓடுகின்றவேளையில் ஈழத்துத் தமிழ்ப்படங்களைப் போட்டு நஷ்டமடையாமல் ஈழத்துத் தமிழ்த்திரைப்படங்கள் பலவற்றையும் ஒரே நேரத்தில் பல திரையரங்குகளில் ஓடவிடவேண்டும். இந்தக் காலகட்டத்தில் தென்னிந்தியத் திரைப்படங்கள் (அவை பழையனவோ – புதியனவோ) எதையுமே காண்பிக்கக்கூடாது. இப்படி ஒரு சூழ்நிலையை ஒரு வாரத்திற்காவது உருவாக்கினால், குறிப்பிட்ட அந்த ஒரு வார காலத்திலாவது - பொழுது போகவேண்டுமே என்பதற்காக- கட்டாயத்தின் பேரிலேனும் ரசிகர்கள் அவற்றைப் பார்க்கத்தான் செய்வார்கள். 'இனி ஓடாது' என்று பெட்டியில் பூட்டிவைத்திருக்கும் படங்களைக்கூட இந்த நிலையில் வெளியே உலாவவிட வேண்டும். ஓடுகின்ற படங்களில் எதைப் பார்ப்பதென்று ரசிகர்களே தீர்மானிக்க இடம் தருவதாகவும் இது அமையலாம்.

''இந்தப் படங்கள் ஓடுகிற வரையில் தியேட்டர்பக்கமே தலை வைத்துப் படுப்பதில்லை'' என்று ரசிகர்கள் சபதம் செய்யவா போகிறார்கள்? சொல்ல முடியாது; நமது ரசிகர்கள் அப்படிச்செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை,

**கனா. மகேஸ்வரன்**

[கட்டுரையில் வரும் கருத்துக்கள் யாவும் கட்டுரை ஆசிரியரின் கருத்துக்களே.]

## சோவியத் மொழியில்

# மகாபாரதம்

துருக்மெனியக் குடியரசின் விஞ்ஞானப்பேரவையைச் சேர்ந்த சிலிம் (அறிவு) பதிப்பகமானது மஹாபாரதத்தின் தத்துவார்த்தக் கருத்துக்கள் அடங்கிய மூன்று பாகத் தொகுதியொன்றை விரைவில் வெளியிடும். பிரபல நரம்பியல் நிபுணனும் பல மருத்துவ ஆராய்ச்சிக் கட்டுரைகளின் ஆசிரியரும் பண்டைய இந்தியா பற்றிய சிறந்த அறிவாற்றல் படைத்தவருமான பி.எல். ஸ்மிர்னேவ் இந்தப் பகுதிகளை மொழிபெயர்த்துள்ளார்.

மஹாபாரதத்தின் முக்கிய பகுதிகளை மொழிபெயர்க்க பி. எஸ். ஸ்மிர்னேவுக்குக் கிட்டத்தட்ட அரைநூற்றாண்டுக்காலமாயிற்று. இப்பகுதிகளை 1955–72ல் துருக்மெனிய விஞ்ஞானப்பேரவை 8 பாகங்களாக வெளியிட்டது.

1948 அக்டோபரில் ஏற்பட்ட பயங்கரமான பூகம்பத்தின்போது ஒரு வீட்டின் இடிபாடுகளின் புதையுண்ட ஸ்மிர்னேவ் அதிசயித்தக்க முறையில் உயிர்தப்பினார். அப்போது மருத்துவக்கல்லூரி மாணவராக இருந்தவரும், இப்போது துருக்மேனியாவின் தலைமை நரம்பியல் நிபுணரும் ஸ்மிர்னேவுக்கு பின்னர் அந்தப் பதவிக்கு வந்தவருமான ஒய். வொலோப்யேவி தான் இவரைக் காப்பாற்றினார். மரணத்தின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட ஸ்மிர்னேவ் உடனடியாக சேதமடைந்து போன தனது வீட்டுக்கு விரைவது கண்டு பெரிதும் வியப்புற்றார், வொலொபுயேரி இடிபாடுகளிலிருந்து சில 'பைல்களை' வெளியே எடுத்த ஸ்மிர்னேவ் இது தான் மஹாபாரதம் என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்.

ஸ்மிர்னேவ் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த போது கூட இந்த மாபெரும் காரியம் சம்பந்தமான தனது பணிகளை நிறுத்திவிடவில்லை. கடைசிவரிகள் இவர் கண்துஞ்சுவதற்குச் சில மணிநேரத்துக்கு முன்னர் இவர் சொல்லி எழுதப்பட்டவையாகும். மஹாபாரதத்தை இவர் மொழிபெயர்த்தது மட்டுமல்லாமல், நூற்றுக்கணக்கில்

(7-ம் பக்கம் பார்க்க)

# திருவருள் மகிமை

**திருவருளின் மகிமையால் உலகில் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்கின்றன. ஆனால் இன்றைய விஞ்ஞான உலகம் இவைகளை 'நம்ப மறுக்கின்றது. திருவருளால் நிகழ்ந்தசம்பவங்களை இக்கட்டுரை ஆசிரியர் தருகின்றார்.**

ந. கனகநாயகம்

இந்தப் பிரபஞ்சம் விசித்திரமானது. அது இருவகைப்படும். பிரகிருதி-ஆத்மா (ஆத்ம சக்தி.)

விஞ்ஞானம் புறப்பொருளாகிய பிரகிருதியை மட்டுமே தீவிர ஆராய்ச்சிசெய்து, அதில் அதிதீவிர முன்னேற்றமடைந்துவருகிறதென்பது வெளிப்படை. இன்னும் விரிந்துகொண்டே போகிறது. உதாரணமாக 1974-ம் ஆண்டு அமெரிக்காவில் உலகப்பிரசித்திபெற்ற வானசாஸ்திரிகளும் வேறு விஞ்ஞானிகளும் ஒரு கருத்தரங்கில் விடுத்த அறிக்கையின்படி எங்கள் பூமியைத்தவிர மனித சஞ்சாரமுள்ள கிரகங்கள் ஒரு கோடி வரையில் இருக்கின்றன. மேலும் அங்கு வாழும் மக்கள் எங்களிலும் பார்க்க விஞ்ஞானத்தில் அதிக முன்னேற்றம் அடைந்திருப்பவர்கள்- சில வருடங்களுக்குமுன் உலகின் பல பாகங்களிலும் 'பறக்கும் தட்டுகள்' பூமியை அணுகிக் கண்காணித்ததை அறிவீர்கள்.

மெஞ்ஞானமானது ஐம்புலன்களுக்கும் பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்டு அளவற்ற சக்தி (ஆத்ம சக்தி) உளதென்றும், தெய்வீகமானதென்றும் உருவம், அருவுருவமாய் எங்கும் வியாபித்திருக்கிறதென்றும் எங்கள் பழங்கால ரிஷிகள் கூறியிருக்கிறார்கள். அதை விஞ்ஞானிகள் ஏற்கவில்லை. ஆனால் சமீபத்தில் நவீன மனோதத்துவ நிபுணர்கள் (para. Phsychologists) சிறு சிறு ஆராய்ச்சிகள் மூலம் E. S. P, Telepathy Telekinisis என்ற சக்திகள் உண்டென்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். அண்மையில் அமெரிக்காவில் மூன்று வருட ஆராய்ச்சியின் பயனாக, மகாபாரத யுத்தத்தை சஞ்சயன் திருதிராஷ்டிரனுக்கு, தூரதிருஷ்டியினால் (Television) விபரமாகக் கூறியது ஒத்துக்கொள்ளத்தக்கதென்றார்கள். நோபல் பரிசு புகழ் பெற்ற லுயிபாஸ்ரியோர், அப்ரன் சின்கிளெயர், அலெக்சிஸ் கரெல், அல்பேற் ரினஸ்ரின் போன்ற விஞ்ஞானிகளின் சில வாக்குகள் கவனிக்கத்தக்கன

விஞ்ஞான அறிவே மனிதனைக் கடவுளுக்கு எட்டவைக்கிறது. ஆனால் முதிர்ந்த அறிவோ அவனைக் கடவுளிடம் சேர்க்கிறது. எயின்ஸ்ரின் என்ற ஜெர்மன் விஞ்ஞானி கூறியது 'Science wethout Religion is blind & Religion without Science is lame' அதாவது 'சமயமற்ற விஞ்ஞானம் ஒரு குருடு; விஞ்ஞானம் அற்ற சமயம் ஒரு முடம்.' ஆகவே சுவமி சிவானந்த சாஸ்திரி 'விஞ்ஞானமும் ஆத்மஞானமும் இரண்டும் மனிதன் படிக்க வேண்டியவை' என்று மண்டோக உபநிடதம் கூறுகிறதென்கிறார் மேலும் அவர் கூறியதாவது:-

'விஞ்ஞானம் இன்பம் தருவது. கலையானது அன்பு தருவது.' 'சமமும் விஞ்ஞானமும் மனிதனுடைய பூரண வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை'.

இந்த ஆத்ம தெய்வீக சக்தியை விளக்குமுகமாக, பழைய புராண நாயன்மார் வரலாறுகள் தற்கால இளைஞர் விடுகதைகளெனக் கருதக்கூடுமென்று அஞ்சி, சில சமீபகால சரித்திர உண்மையுள்ள சம்பவங்கள் எடுத்துரைப்பது நன்று. இவைகள் பகுத்தறிவாள அறிஞர்களும் கவனிக்கத்தக்கவை.

## பிரான்சில் ஒரு சம்பவம்

இது பூரி ஆதீனத்து ஜெகத்குரு சங்கராச்சாரியர் குறிப்பிட்டது. அங்கு ஒரு கிராமத்தில் ஒரு சாதாரணப் பெண் தன் சொந்தப் பாஷையையே அதிகம் படிக்காதவள். ஒரு முறை அவளை நெருப்புக் காய்ச்சல் மூன்று மாத காலமாய்த் தாக்கி அரைகுறை அறிவுணர்ச்சியிருக்கும் சமயத்தில் ஏதோ பிதற்றினாள்'' வைத்திய நிபுணர்கள் அது நெருப்புக்காய்ச்சலாலுண்டான வைத்தியம் என்றுவிட்டனர். பிறகு ஒரு விசாரணைக் குழு விடுத்த அறிக்கையின்படி அப்பெண் பேசியன ஜெர்மன் புத்தகங்களிலிருக்கும் சில வாக்கியங்கள், யூத பாஷை. அத்துடன் தென் ஆபிரிக்காவில் வழங்கும் இருபது மொழிகளெனத் தெரிந்தது. இது மிகவும் விசித்திரமானதே.

## கலக்டருக்கு அபயம்

ஆதிபராசக்தி என்னும் திரைப்படத்தில் ஒரு சம்பவம். ஆனால் திரைப்படக்காரர் அதை உருக்குலைத்து கருத்தை மாற்றியமைத்துள்ளார்கள். சரித்திரரீதியில் இச்சம்பவம் கிழக்கிந்திய கொம்பனிகாலம். 1804-ம் ஆண்டு பவானி கூடல் என்னும் பழம் தலத்தில் நிகழ்ந்தது. பவானி, காவேரி என்ற இரு நதிகளும் அமுதநதி என்னும் ஊற்றும் சங்கமமாகுமிடம். இங்கு ஒரு பழைய சிவன்கோவில்; மகேந்திரவர்மாவின் காலத்திற்கு முற்பட்டது. இந்த ஜில்லா கலக்டரான வில்லியம்காரோ என்பவரின் மாடிவீடு இக்கோவிலின் வாசலுக்கு நேரேயே இருந்தது. தினமும் நூற்றுக்கணக்கான பத்தர்கள் சங்கமத்தில் தீர்த்தமாடி, பக்திசிரத்தையுடன் சுவாமி தரிசனம் செய்யும் காட்சி, கலக்டர்துரையின் உள்ளத்தை தன்னை அறியாமலேயே நெகிழச் செய்து கொள்ளைகொண்டது! ஆகவே தானும் அவ்வாலய சுவாமியைத் தரிசனம் செய்யவேண்டுமென்ற ஆசை உதித்தது. ஆனால் அந்தக் காலம் வேறு சமயத்தவர் கோவில்களுக்குள் போகமுடியாதகாலம். ஆகவே பூசை நேரங்களில் கலக்டர் தனது மாடியிலிருந்தே கைகூப்பி வணங்கினார். இது, பிரசித்தமாகி ஆதீனகர்த்தாக்களுக்கும் எட்டியது. இப்படிப்பட்டவருக்கு ஒரு சலுகையாக புறச்சுவரில் இரண்டு துவாரங்கள் செய்தார்கள். அதனூடாக கலக்டர் தினமும் தவறாமல் சுவாமிதரிசனம் செய்துவந்தார். ஒருநாள் மத்தியானம் மாடியில் அவர் நித்திரையிலிருந்தபோது கனவில் ஒரு குரல், அவரை உனடியாகவே மாடியிலிருந்து இறங்கி வெளியேறும்படி உத்தரவு பிறப்பித்தது. கலக்டர் திடுக்கிட்டெழுந்து அப்படியே ஓடினார் வெளியேறியதுதான் தாமதம்! ஆச்சரியம்! அம்மாடி இடிந்துவிழுந்து நொறுங்கியது. தன்னைக் காப்பாற்றியது தான் தினமும் வணங்கிய அம்மனின் திருவருளே என்று அவர் நம்பினார். தன நன்றிக்காக யானைத் தந்தத்தில் பொன் மருவிய வேலைப்பாட்டுடன் ஒரு தொட்டில் செய்வித்து அக் கோவிலுக்கு காணிக்கையாகக் கொடுத்தார், அதில் ஆங்கிலத்திலும் தமிழிலும், கலக்டர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அது ஒரு கண்ணாடிப்பெட்டியில் அக் கோவில் களஞ்சியத்தில் இப்பொழுதும் இருக்கிறது. அவருக்காக சுவரில் செய்யப்பட்ட இரு துவாரங்களை இன்றும் காணலாம்.

## குளத்தைக் காத்த ராமன்

இந்தியாவில் இராமபிரான் கோவில்கள் மிகச் சிலவே. செங்கல்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம் என்னும் ஊரில் கோதண்டராமசுவாமிகோவில் உண்டு. பழம்பெருமை வாய்ந்தது. இங்குதான் இராமானுஜர் தனது குருவிடம் தீட்சை பெற்றார். இங்கு ஒரு பெரும் குளம் எத்தனையோ ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கிறது. ஆனால் ஒருகுறை. வெகுகாலமாக ஒவ்வொரு வருடமும் அதிகம் மழை பெய்து குளக்கட்டு உடைந்து பெரும் சேதம் உண்டாகிவிடும். ஆகவே ஒருவருடம் ஐரோப்பிய கலக்டர் தன்னால் இயன்ற மட்டும் குளத்தைப் பெலப்படுத்தி உடைக்காமல் ஆகவேண்டியதைச் செய்தார். ஆனால் அவ்வருடம் வழக்கம் போல அதிக மழை பெய்ததினால் குளக்கட்டு உடைக்கும் நிலையில் இருந்தது. கலக்டர் என்னசெய்வதென்று தெரியாமல் மனம் கலங்கினார். கடவுளை வேண்டினார். அச்சமயம் அவ்விலாகாவிலுள்ள சீனியர் குமாஸ்தா - அவ்வூர் பாமரசனங்களுக்குள், குளக்கட்டிலிருக்கும் கோதண்டராமர் கோவில் பாழடைந்து கிடப்பதால்தான் வருடா வருடம் இச் சேதம் விளைகிற தென்ற ஒரு நம்பிக்கை இருப்பதாக கலக்டருக்கு எடுத்துரைத்தார். உடனேயே ஐரோப்பிய கலெக்டருக்கு இராமர், சீதை, இலட்சுமணர் இவர்களின் காட்சி (Vision) தோற்றப்பட்டது. அவர் உடனே கீழே விழுந்து நமஸ்கரித்து மழை மேலும் பெய்யாமல், குளக்கட்டு உடைபடாமல் காப்பாற்றப்பட்டால், அரசினரின் கணக்கிலேயே தானே அக் கோவிலைத் திருத்துவதாக நேர்த்திக்கடன் செய்தார். மழையும் நின்றது. குளக்கட்டும் உடையவில்லை. கலெக்டரும் தான் நேர்ந்தபடியே கோவிலைத் திருத்தினார். இன்றும் இதன் விபரம் அக் கோவில் மண்டபத்தில் கல்வெட்டிலிருக்கின்றது. அரசினரின் செங்கல்பட்டு ஜில்லா புத்தகங்களிலும் (Records) இது சொல்லப்பட்டிருக்கிறது.

## திருக்கேதீஸ்வரத்தில்

தேவாரப்பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீஸ்வரத்தில் ஓர் அற்புதம். இதைச் சொன்னவர் யாழ்ப்பாண நீதிபதியாகிய திரு நவரத்தினம் அவர்கள். சேர். பி. கந்தையா வைத்தியநாதனுடன் கூட இருந்து கோவில் திருப்பணியை நிறைவேற்றியவர் இவர்.

பழைய கோவிலை இடித்து புதியகோவிலுக்கு அத்திபாரம் வெட்டப்பட்டது. முகூர்த்த நாளுக்கு காலம் இருந்தது. ஆகவே யாரும் கிட்ட அணுகி மண்இடிந்து விழாமல் கயிறும் கட்டி காவலும் போடப்பட்டது. திரு. நவரத்தினம் காலை எழுந்தவுடன் முதல்வேலை. கோவிலடிக்குச் சென்று அவ்விடத்தைப்பார்ப்பதே அப்போது கர்ப்பக்கிரக ஸ்தானத்தில் ஒரு மஞ்சள் பொன்னொச்சிப்பூ இருந்தது தீவிரமாக விசாரித்தும், ஒருவருமே கிட்டப் போனதற்கு அறிகுறி ஒன்றும் தோன்றவில்லை. கூர்ந்து கவனித்தபொழுது ஒரு பாம்பு ஊர்ந்த அடையாளம் மட்டுமே காணப்பட்டது. காவலும் கூடப்பட்டது, ஆனால் இப்படியே தினமும் காலையில், இருபது நாட்களுக்கு மேல் முகூர்த்த நாள் வரை ஒவ்வொரு பூவும், பாம்பின் சுவடும் காணப்பட்டன. இது திருவருளே என்று எல்லோரினதும் கருத்து.

வேறொரு நாள் காலைப் பூசை மணிஓசை சரியான நேரத்திற்கு கேட்காதபடியால் உடனே கோவில் தெற்கு வாசல் கேட்டில் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு உள்ளிருப்பவரைக் கூப்பிட்டார். அவர் வந்து ''ஐயா கைகளைக் கேட்டால் எடுங்கள்'' என்று அவசரப்பட்டு உரத்துச்சொன்னார், மேலே பார்த்தபோது தான் ஒரு பாம்பை இரு கைகளாலும் இறுகப்பிடித்திருப்பதாகத் தெரிந்தது. ஆனால் தனக்கு பயம் கொஞ்சமேனும் இருக்கவில்லையென்றும், பாம்பும் ஒன்றும்செய்யவில்லையென்றும் சொன்னார். மேலும் நடராசர் சந்நிதானத்தில், இந்தியாவிலிருந்து பூசைக்கு ஒழுங்குசெய்யப்பட்ட பூசகர் (அவர் இன்றும் கோவில் குருக்களாகக் கடமையாற்றுகிறார்) பூசை செய்யப்போனபோது பாம்பொன்று நடேசர் அடியில் சுற்றியிருந்தது. அவர் பயந்து தான் இனிப் பூசைசெய்யவில்லையென்றும், • தன்னை விலக்கும்படியும் கேட்டதற்கு வைத்தியநாதன் இணங்கவில்லை, பூசகர், பாம்பு அவ்விடத்தை விட்டுப் போகும் வரைக்கும் உண்பதில்லையென்று சத்தியாக்கிரகம் செய்தார், பாம்பு வெளியே போனது சேர்.வைத்தியநாதன் தனது அறையிலிருந்து வேலை செய்யும் பொழுது பாம்பு அவரது மேசைமேல் ஊர்ந்துபோவது வழக்கம். அவருக்குப் பயமே தோன்றுவதில்லை. மிகவும் பணிவாக ஏனப்பா என்னை தழப்புகிறாய்'' என்று மட்டும் மெதுவாகச் சொல்லுவார்.

## குறிப்பு

நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோவிலில் பழையகாலத்தில் இம்மாதிரியே பாம்பொன்று கடலுக்கப்பால் இருந்து பூக்கொண்டு வந்ததாக ஒரு ஐதீகக்கதை உண்டு. மேலும் காரைநகர் (பழைய காரைதிவு) ஈழத்துச் சிதம்பரத்திலும் (சிவன்கோவில்) முன் ஒருகாலம் பொன்னாலைக் கிருஷ்ணன் கோவிலிலிருந்து ஒரு பாம்பு பூக்கொண்டு வந்ததாகவும் பழைய மீனவர்களுக்குள் ஒரு கதை நிலவியது.

## மகாத்மாகாந்தி

காந்திமகான் என்று ஒருவர் இருந்தார் என்று தெரியாமலேயும் இக்காலச் சிறுவர் சிலர் இருக்கக்கூடும். அவர் ஓர் அரசியல் ஞானி. உலகில் முதன்முதல் அரசியல்பிரச்னைகளை சாத்வீகமுறையில் தீர்த்தவர்— தீர்ப்பதற்கு வழிகாட்டியவருமாவார். அவர் ஒரு திருஅவதாரம் என்பதே பலரின் கருத்து. தென்ஆபிரிக்காவில் அவர் போராடிய ஸ்மற்ஸ் என்னும் தலைவர், மகாத்மாகாந்தி அணிந்த செருப்பைக் கவனமாய் வைத்திருந்து அவர் இறந்தபின் ஒரு ஞாபகச்சின்னமாகவும், அன்பளிப்பாயும் இந்தியாவிற்கு அனுப்பினாரென்றால் காந்தியடிகளின் மகிமை என்னே! காந்திமகானின் வாழ்க்கையில் இரு சம்பவங்கள் கூர்ந்துநோக்கத்தக்கன.

தென்ஆபிக்காவில் இந்தியரின் சுயமரியாதைக்குப் போராடிய காலத்தில் அங்கு Plague) கோதாரி என்ற தொற்றுநோய் பரவிற்று. அரசினர் ஒரு விசேஷ வைத்தியசாலை நிறுவினர். காந்தியடிகள் தனது ஆச்சிரமத்திலேயே இந்திய நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்தார்- அதாவது இயற்கை வைத்தியம் (Natuer-Cure) அவர் பாவித்த மருந்துகள் வெறும் மண்ணும் தண்ணீருமே அநேகர் அவரின் சிகிச்சை முறையில் நம்பிக்கை கொள்ளவில்லை. ஆனால் கடைசியில் அரசினரின் வைத்தியசாலையில் பெரும்பான்மையான நோயாளிகள் இறந்தனர். அதுமட்டுமல்ல டாக்டர், நேர்ஸ்மாருமே இறந்தனர். மகாத்மா காந்தியின் ஆச்சிரமத்தில் இறந்தது மிகச் சிலரே. வேறு ஒருவருக்கும் நோய் தொற்றவேயில்லை. அப்போது அவர் கூறியதாவது!

நோயாளிகள் தப்பியது கடவுளின் திருவருளே என்ற எனது நம்பிக்கை மூடத்தனம் என்று கருதினால் அந்த மூடத்தனத்தையே நான் கட்டி அணைக்கவிரும்புகிறேன்.

காந்தியடிகளின்சேவாக்கிரம ஆச்சிரமத்தில் அவருடன்பலர்- ஆண்கள், பெண்கள், குழந்தைகள் வசிப்பது வழக்கம். ஒரு குஷ்டரோகி அவரை நேரில் சந்திக்க வேண்டுமென்று வந்து வெளியில் இருந்தார். அவர் பெயர் பாசூர்சாஸ்திரி, அவர் சமஸ்கிருத பண்டிதனும் ஒரு கவிஞனுமாவார். முன்னொரு காலம் சத்தியாக்கிரக இயக்கத்தில் ஏர்வாடா சிறையில் காந்தியடிகளுடன் கூட இருந்தவர். தனது பழைய சிறைச்சாலை நண்பனை குஷ்டரோகி என்ற காரணம் பற்றி உள்ளுக்கு அனுமதிக்காமல்விடுவது தனது அகிம்சா தர்மத்துக்கு முரணாகும். ஆனால் பலர் இருக்கும் இடத்தில் ஒரு குஷ்டரோகியை அனுமதிப்பதும் பெரும் தவறு என்றும் எண்ணினார் இது கடவுளின் சோதனையே என்று மனம் கலங்கி நித்திரையில்லாமல் கடவுளை வேண்டினார். அதிகாலையில் ஆச்சிரமத்து வாசிகள் அனைவரையும் கூட்டி தனது பிரச்னையை- கடவுள் தந்த சோதனையை விளக்கினார். என்ன ஆச்சரியம்! ஆச்சிரமவாசிகள் எல்லோரும் ஏகமனதாக அக் குஷ்டரோகியை உள்ளே அனுமதிக்க ஒத்துக்கொண்டார்கள். அப்படியே அவருக்கும் ஒரு குடிசை அமைத்து காந்தியடிகளே நேரில் அவரது கை, கால் வருடியும் தனது அங்கவஸ்திரத்தாலே ஒற்றி தனது இயற்கை வைத்தியம் செய்து நோயை மாற்றியே வெளியே அனுப்பினார். அந்நோய் ஒருவருக்குமே தொற்றவில்லை. இது திருவருள் அன்றோ.

## புரட்சிக்கு முன்னும் பின்னும்

உஸ்பெகிஸ்தானில் காரகால்பாக்ஸ் என்று ஒரு வகுப்பார்; தென் சைபீரியாவின் துவாஇன மக்கள் – இவ்விருவரும் 1917-ம் ஆண்டுப புரட்சிக்கு முன் தங்களுக்கென்று ஒரு மொழியே இல்லாதிருந்தார்கள். இன்று காரகால்பாக்ஸ் மொழியில் ஏர்னஸ்ட் எமிங்வேயின் 'கிளிமாஞ்சாரோவின்' பனிமுடி என்ற நூலும் துவா மொழியில் 'கிழவனும் கடலும்' என்ற நூலும் கிடைத்துள்ளன.

# வைஜயந்தி இப்பொழுது என்ன செய்கிறார்?

**பரத நாட்டியத்துறையில் ஆராய்ச்சிசெய்வதும், சிறந்த நாட்டிய நாடகங்களை உருவாக்குவதும், இப்பொழுது வைஜயந்திமாலாவின் முழுநேரப் பொழுதுபோக்காகவிருக்கிறது. ஒரு காலத்தில் சினிமா உலகில் கொடி கட்டிப் பறந்தவரான இந்நாட்டிய தாரகைக்கு இப்பொழுதும்கூட படத்தில் நடிக்க அழைப்புகள் வருகின்றனவாம். ஆனால் அவர் அதற்குமுற்றும் முழுதாக முழுக்குப்போட்டுவிட்டார். இது அவர் அளித்த ஒரு சுவையான பேட்டி.**

கிரிஜா ராஜேந்திரன்

ஒரு குழந்தைக்கு தாயாகி விட்ட போதிலும் வைஜயந்தி மாலா இன்னமும் முன்னர் போலவே கட்டுடலோடும், கவர்ச்சியாகவும்தான் இருக்கிறார்.

''உங்கள் அழகைப் பாதுகாத்துக்கொள்ள ஏதாகிலும் ஒரு அழகுசாதன முறையைக் கையாள்கிறீர்களா, மற்றவர்களுக்கும் அதைச் சொல்லிக் கொடுப்பீர்களா?''என்றுகேட்டதற்கு; அவர் பின்வருமாறு பதில் சொன்னார்.

''எனக்கு என்ன 50, 60 வயதாகிவிட்டதா? எதுவானாலும் ஒரு பெண்தான். மனதில் எண்ணுகிறமாதிரி இளமையாகவே இருப்பார். 60 வயது வந்தபிறகும் கூட நான் மற்ற பெண்களைவிட இளமையாகவே தோற்றமளிப்பேன் என்று நான் நம்புகிறேன். ஆனால் இந்த என் அழகில் இரகசியம் ஒன்றும் இல்லை. கடுமையான பரதநாட்டிய பயிற்சியைத்தவிர வேறு எதையும் கைக்கொள்வதில்லை. இது உடல் — உள்ளம் இரண்டையும் இலகுவாக்குகின்றது. அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு — என்னைப் பொறுத்தவரை நூறுவீதமும் இது உண்மைதான்.''

## சினிமாவுக்குத்திரும்பும் எண்ணம் உண்டா?

எட்டுஆண்டுகளுக்குமுன்நடிப்பதிலிருந்து விலகிக்கொண்ட வைஜயந்திமாலாவிடம் மீண்டும் படங்களில் நடிக்கும் எண்ணம் உண்டா என்றுகேட்டபோதுமீண்டும்படத்தில்நடிக்கவேண்டும் என்ற உணர்வே எனக்குக் கிடையாது என்றும் மீண்டும் நடிக்க வரும்படி இப்போதும்கூட மாதந் தவறாமல் அழைப்புகள் வராமலில்லை. அவைகளில் சில மிகவும் கவர்ச்சியாகவும் இருப்பதுண்டு. ஆனால் மேடையில் ஏறி நாட்டியம் ஆடவேண்டும் என்ற ஆர்வத்தின் அளவுக்கு இவை என்னை ஈர்ப்பதில்லை'' என்றார்.

சினிமா உலகில் தமக்கிருந்த வரவேற்புபற்றி அவர்குறிப்பிடுகையில், நான் சாஸ்திரீய நடனத்தில் பெற்றிருந்த பயிற்சியும், எனது குடும்பப் பின்னணியும் என்னை படத்திலும் சரி வெளியிலும்சரி எல்லாரும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடத்தினார்கள் என்றார்.

## தலைக்கனமா?

''கண்ணியமாக என்கிறீர்கள், ஆனால் நீங்கள் கர்வம் பிடித்தவராகவும், ஒதுங்கி நடப்பவராகவும் இருந்ததாகக் கூறப்படுகிறதே!''

இதற்கு பின்வருமாறு வைஜயந்தி பதிலளித்தார். ''எனது பாட்டியார் யதுகிரிதேவியைப் பார்த்திருக்கிறீர்களா? அவர் உயரமும், கவர்ச்சியுமுள்ள ஒரு மாது. எனது தாயார் வசுந்தராதேவியும் உயரமான வர் கவர்ச்சியானவர்தான். அவர்களைப் போலவே நானும் நிமிர்ந்தே நடப்பேன். குனிவதுமில்லை; குறுகுவதுமில்லை. ஒருவேளை இதுதான் நான் கர்வம் பிடித்தவள் என்று கருதுவதற்கு காரணமாக இருக்கலாம். படவுலகில் அளவுக்கு அதிகமாக நட்புவைத்துக் கொள்வது சரிப்பட்டுவராது, அந்த அளவில் நான் என் கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொண்டேன்.

''பட உலகில் ஏன் அவ்வளவு அவசரப்பட்டு ஒதுங்கி விட்டீர்கள், இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு நடித்திருக்க முடியுமே?''

''மற்றவர்கள் ஏன் என்று கேட்கும் சமயத்தில் ஓய்வு பெறவேண்டும், ஏன் ஓய்வு பெறக்கூடாது? என்று கேட்கும் சமயத்தில் அல்ல! நான் டாக்டர் பாலியைத் திருமணம் செய்துகொண்ட பொழுது நாட்டியத்தில்தான் நான் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று இருவரும் முடிவு செய்தோம். படங்களில் நான் இன்னும் சாதிக்க வேண்டியது என்ன இருந்தது? புகழின் உச்சிக்கே சென்று ஒரு பெயரையும் சம்பாதித்துக்கொண்டுவிட்டேன். அந்தச் சமயத்தில் விலகவேண்டும் என்று நான் எடுத்த முடிவு சரியானதே என்பதில் எனக்கு சற்றும் சந்தேகமில்லை. அதனால் நாட்டியத்தில் அதிக கவனம் செலுத்தவும், பரதநாட்டியத்தில் பல ஆராய்ச்சிகளைச் செய்யவும் எனக்கு போதிய ஆற்றலும் நேரமும் கிடைத்தது.''

## நாட்டிய உலகில் முக்கிய சம்பவம்?

''சரி நாட்டிய உலகில் உங்களுக்கு ஏற்பட்ட மிக முக்கிய சம்பவமொன்றைச் சொல்வீர்களா. அதேசமயம் உங்களது சிறந்த நாட்டிய நாடகம் எது என்றும் சொல்லுங்கள்.''

''நாட்டிய உலகில் மிக முக்கிய சம்பவம் எது என்றால் சந்தேகமில்லாமல். ஐ. நா. வில் நாட்டிய நிகழ்ச்சியொன்றை நடத்தும்படி பொதுச்செயலாளர் யுதாண்ட்டிடமிருந்து கிடைத்த அழைப்பைத்தான் குறிப்பிடுவேன். இன்னொரு சம்பவம்; பம்பாயில் நான் பிர்லாமாளிகையில் நிகழ்ச்சியொன்றை நடத்தியபோது சிறந்த இந்தியக் கலைஞர்களைத் தெரிவுசெய்து அடிலெயிட் விழாவில் ஆடச் செய்வதற்காக இரண்டு அவுஸ்திரேலியர்கள் வந்திருந்தனர். எனது நிகழ்ச்சியைப் பார்த்தின் பின்னர் அவர்கள் என்னிடம் ஒரே ஒரு வேண்டுகோளை மாத்திரம் தான் விடுத்தனர்; வெளிநாட்டவர் முன் ஆடவிருப்பதால் எந்தவொரு நாட்டிய அம்சத்தையும் மாற்றி அமைத்துவிடாதீர்கள் என்பதுதான் அது. அப்படியானால் 45 நிமிடங்கள் 'வர்ணம்' போன்ற அயிட்டத்தை வைத்துக்கொண்டால் உங்கள் ஆஸ்திரேலியர்களுக்குசலிப்புத் தட்டிவிடாதா என்று நான் கேட்டேன்.

''இல்லை, இல்லை, எங்களுக்கு உண்மையான கலைதான் வேண்டும், ஏற்றுமதிக்காக தயாரிக்கப்பட்டவொன்றல்ல'' என்று கூறினார்கள் அவர்கள் சிறந்த நாட்டிய நாடகம் என்று கேட்டால், எதைச் சொல்வதென்றுஎனக்குத்தெரியவில்லை. எனது கணவர் என்றால் எல்லாவற்றையும் 'பலே பலே' என்று பாராட்டுகிறார். எனது நாட்டிய நிகழ்ச்சிகள் யாவும் ஆராய்ச்சிகளின் பின்னரே தயாரிக்கப்படுகின்றன. ரசிகர்களுக்கு ஏற்றவிதத்தில் அமைக்கவேண்டும் என்பதிலும் நான் கவனம் செலுத்தாமல் இல்லை என்றாலும் நான் ஒன்றைக்குறிப்பிடமுடியும் 'சண்டிலிக்கா', அதற்கு ரவிசங்கர் அவர்கள் இசை அமைத்தார்கள். இதனை தாகூர் நாட்டிய நாடகத்துக்காக எழுதவில்லையென்றுகூறி பலர் என்னை அதைரியப்படுத்தினர்கள். அதுவே எனக்கு ஒரு சவாலாக அமைந்தது. இதுதான் இந்த வகையில் பரதநாட்டியத்தில் உருவாக்கப்பட்ட முதலாவது சமகால நாட்டிய நாடகம் எனலாம்''

## மகன் சுஸீந்திரா பற்றி...

''உங்கள் சொந்த வாழ்க்கையைப் பற்றி சொல்லுங்கள்; உங்கள் கலையைப் பின்பற்றக்கூடியதாக ஒரு பெண் குழந்தை வேண்டும் என்று நீங்கள் கருதவில்லையா?''

''ஆம்... இல்லை இரண்டுதான் இந்த உயர்ந்த கலையை ஊட்டி வளர்க்கக்கூடியதாக ஒரு பெண் குழந்தை கிடப்பதைநான் விரும்பியிருப்பேன் தான், ஆனால் சுசீந்திரா (மகன்) வைக் குறித்து எனக்கோ என் கணவர் டாக்டர் பாவுக்கோ எந்தவிதக் கவலையுமில்லை. தகப்பனைப் போல ஒரு டாக்டராகவேண்டும் என்கிறான். அதேசமயம் அதிசயிக்கும்படியான லய உணர்வுகள் அவனுக்கிருக்கிறது. பியானோவில் வாசிக்கும் திறமையும் இருக்கிறது. எனது உண்மையான ரசிகனும் அவன்தான். அவன் பையனாக இருப்பதால், எனக்கு எதுவித 'காம்ப்லெக்ஸ்' சும் இல்லை' உண்மையில் எந்தத்தாய்தான் ஒரு மகனை விரும்பாமலிருக்கப் போகிறாள்!''

''சுசீந்திரா என்று ஏன் பெயரிட்டீர்கள். சரத் நாவலில் இப்படியொரு பெயர் வருகிறது. வங்கத்தில் அதற்கு பெரும் வரவேற்பு?''

''இந்தக் கேள்வியைக் கேட்ட தொளாயிரத்து தொண்ணூற்றி ஒன்பதாவது

[7-ம் பக்கம் பார்க்க]

---

## வானொலி நாடகம் எழுதுவது எப்படி-5

# ஒரு நாடகத்தில் எத்தனை அம்சங்கள் இருக்கலாம்?

குரலால் உணர்த்தவேண்டிய சில அறிவுறுத்துரைகளையும் அடைப்புக் குறிக்குள்குறிப்பிடலாம்:

உதாரணமாக:
(இருமிக்கொண்டே)
(செருமிக்கொண்டே)
(சிரித்துக்கொண்டே)
(அழுதுகொண்டே)
(தள தளத்த குரலில்)
(விம்மிக்கொண்டே)
(பெருமூச்சுவிட்டுக் கொண்டே)
(கொட்டாவி விட்டபடி)
(தனக்குள்பேசிக்கொண்டே)
(தூரத்தில்நின்று கொண்டே)

என்பன போன்றவற்றை சந்தர்ப்பத்திற்கேற்றவாறுஎழுதிக்கொள்ளலாம். இவை நடிகர்களுக்கு உதவியாக இருக்கும்.

கதையைத் தேர்ந்தெடுத்து விட்டோம். கதாபாத்திரங்களைத் தீர்மானித்துவிட்டோம் என்று வைத்துக்கொள்வோம். இதைவைத்து வசனங்கள் எப்படி அமைக்கவேண்டுமென்பதையும், உரையாடல்களின் போதும்-கதை நிகழும்போதும் என்னென்ன அறிவுறுத்துரைகளைப் பயன்படுத்த வேண்டுமென்பதையும், ஒலிக்குறிப்புக்களின் உபயோகம்பற்றியும் ஓரளவு தெரிந்துகொண்டோம் அல்லவா?

## நாடக அங்கங்கள் எவ்வாறு அமைப்பது?

முன்னொரு சந்தர்ப்பத்தில் வசனங்களைச் சிக்கனமாகக் கையாளவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தேன். அதாவது நாடகக் கதையோடு வசனங்கள் ஒன்றிப் போகவேண்டும். சில சமயங்களில் பத்து நிமிடத்துக்குமட்டும் ஒலிபரப்பக்கூடிய நாடகத்தை வெறும் தேவையற்ற வசனங்களைச் சேர்த்து பதினைந்து நிமிடங்களுக்கு இழுபடவைத்து எழுதுவதுமுண்டு. இதனால் நாடகம் வள வளவென்றுதானிருக்குமேதவிர இறுக்கமாக அமையாது. இதுபோலவே அங்கங்களை அமைக்கும் போதும் அடுத்து என்ன நடக்கப்போகின்றது என்ற ஆர்வத்தைக் கேட்பவர்களுக்குத் தூண்டும் வகையில் இருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஓர் அங்கம் முடியும் பொழுது அடுத்த அடுத்த அங்கத்தில் இன்ன நிகழ்ச்சிதான் இடம்பெறப்போகின்றது என்பதை சூசகமாக எடுத்துக் காட்டவேண்டும். அனாவசியமான சம்பவங்களைத் தவிர்க்க வேண்டும். ஆயினும் குறைந்தது ஐந்து நிமிடத்திற்கொரு முறையாவது ஏதாவது ஒரு புதிய சம்பவத்தைத் தொட்டுக்காட்டும் வகையில் இருக்க வேண்டும். ஒரே அங்கத்தில் கூட பல சம்பவங்களை ஏற்படுத்தலாம், ஆனால் அவை கதைக்கு அப்பாற்பட்டதாயிருக்கக்கூடாது.

## முப்பது நிமிடம் ஒலிபரப்பக்கூடிய ஒரு நாடகத்தில் எத்தனை அங்கங்களை அமைக்கவேண்டும்?

இத்தனை அங்கங்கள்தான் இடம்பெறவேண்டுமென்ற கட்டுப்பாடு இல்லை. சில சமயங்களில் ஒரே அங்கத்திலேயே சில கிளை அங்கங்களைஅமைக்க வேண்டியேற்படலாம். உதாரணமாக இரண்டு பாத்திரங்களுக்கிடையே உரையாடல் நடந்துகொண்டிருக்கும் பொழுது நடந்துமுடிந்த ஒரு சம்பவத்தை ஒரு கிளை அங்கத்தின் மூலம் வெளிப்படுத்தவேண்டி ஏற்படலாம். இது கதையைப் பொறுத்தே தீர்மானிக்க வேண்டியிருக்கும். என்றாலும்

''வரணியூரான்''

முப்பது நிமிட நாடகத்தில் ஆறு அங்கங்களுக்கு மேற்படாமலும், பதினைந்து நிமிட நாடகத்தில் மூன்று நான்கு அங்கங்களுக்கு அதிகப்படாமலிருப்பது நன்று.

அங்கங்கள் தொடர்புபட்டனவாய் இருத்தல் அவசியம். கதையை நகர்த்திச் செல்லும் பொழுது ஒவ்வொரு அங்கத்திலும் ஏதாவது ஒரு முக்கிய சம்பவம் அல்லது திருப்பத்தை ஏற்படுத்துவது முக்கியம். வெறுமனே வசனங்களால் தான் வானொலி நாடகத்தை அமைத்துவிட்டாலும், வசனங்கள் மூலம் சம்பவங்கள்வெளிப்படுவனவாக இருக்கவேண்டும். ஓர் அங்கம் முடியும் பொழுது அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். மேடை நாடகம் எழுதும் பொழுது (திரை) அல்லது காட்சி முடிவு என்று குறிப்பிடுவது போல இங்கேயும் ஒரு அங்கம் முடியும்போது [இசை] என்று குறிப்பிடலாம். இதைத் தவிர அங்கம் ஒன்று, இரண்டு, மூன்று என்று குறிப்பிடலாம் தவறில்லை தயாரிப்பாளர் புரிந்துகொண்டால் போதுமானது.

## வானொலி நாடகங்களின் தவிர்க்கப்படவேண்டிய அம்சங்கள் ஏதாவது உண்டா?

வானொலி என்பது ஒரு பொதுவான,மக்களோடுஒன்றிவிட்ட-மக்களுக்காகச் செயல்படும் ஒரு சாதனம் எனவே எவர்மனதையும் புண்படுத்தும் வகையில் சம்பவங்களையோ அல்லது வசனங்களையோபுகுத்துவது ஏற்றதல்ல என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லை. முக்கியமாக இன, மத தூஷணை, அரசியல் பிரச்சாரம், விரசமான சம்பவங்கள் ஆகியன தவிர்க்கப்படவேண்டும் மக்கள் மனதைத் தவறான பாதையில் இழுத்துச்செல்லக்கூடிய எந்தச்சம்பவத்தையும் புகுத்தாமல் இருப்பது உத்தமம் என்று பொதுவாகச் சொல்லலாம்.

## நாம் கையாளும் எல்லா ஒலிக்குறிப்புகளும் வானொலி நிலையத்தில் இருக்கிறதா?

அநேகமாக தேவையான ஒலிக்குறிப்புக்கள் யாவும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இருக்கின்றன. இதையிட்டு எழுத்தாளர்கள் அதிகம் கவலைப்படத் தேவையில்லை. இருந்தாலும் ஆரம்ப எழுத்தாளர்கள் பின்வருவனவற்றை ஆரம்பத்தில் உங்கள் நாடகங்களில் புகுத்தலாம்.

வாகனங்களின்சப்தம் (கார், ரயில், ட்ராக்டர், ஆகாய விமானம், ஜீப், பஸ் போன்ற சகல வாகனங்களும்)

மிருகங்களின் ஒலிகள்: (சகல மிருகங்களும்)

மணிச்சத்தம்: (கோவில் மணி தொடக்கம், நேரம் காட்டும் மணிவரை சகலதும்)

போர்ச்சத்தங்கள்: (மூர சொலி, வாள்சண்டை, பீரங்கி வெடி போன்ற பலவும்)

பலவகைப்பறவை இனங்களின் ஒலி: புயல், இடி, மழை, நெருப்பெரிதல் போன்றவை.

இன்னும் பலவகை உணர்ச்சிகளை வெளிக்காட்டவல்ல வாத்திய இசைக்கருவிகளின் ஒலி இன்னும் ஏராளம். அவை யாவற்றையும் எழுதுவது இங்கே பயன்தரா. மேலும் இந்த ஒலிக்குறிப்புக்களுக்காக நாடகம எழுத முற்படுதல் கூடாது. உங்கள்நாடகத்திற்கு அவசியமான ஒலிக்குறிப்புக்

(7-ம் பக்கம் பார்க்க)

நாகம்ஸ்
(சுன்னுகம்)
தினசரி 2-30, 6-30
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
கணவன்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை(
தினசரி 2-30, 6-30
ஏ.வி.எம் ராஜன்-பானுமதி
பத்துமாதபந்தம்

ராஜா
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 5-30
போன்: 7180
சிவாஜி - சாவித்திரி
நடித்த
கைகொடுத்த தெய்வம்

Regal (Jaffna)
Daily at 10-30, 2-30, 4-45&7 p.m.
Adventure and Excitement for the whole Family
CHARLTON HESTON in
CALL OF THE WILD
(Color)

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 10 30, 2-30 மாலை 6-30, 9-30
விஜயகுமார் — ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

லிடோ
போன்: 7698
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் — சுஜாதா
நீ ஒரு மகாராணி

வின்ஸர்
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

மனோஹரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10 30 2-30 6-30
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி
யாழ். நகர்
போன்: 7642
ஃ எம். ஜி. ஆர்.
ஃ சாவித்திரி நடித்த
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
வேட்டைக்காரன்
5-9-77 முதல் எம். ஜி ஆர் — சாவித்திரி
மகாதேவி

ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு
பெண் தெய்வம்

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த
பட்டணத்தில் பூதம்
(கறுப்பு வெள்ளைப் பிரதி)
9-ந் திகதி முதல்
சிவகுமார்
சுஜாதா
அன்னக்கிளி

## சிறு கதை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மூன்று தடவைகள் அவரைச் சந்தித்துப் பேசியிருந்தால் அந்தஊரரார் வேறுவிதமாகவும் கதைகட்டத் தொடங்கிவிடுவார்கள்.

துன்பப்படும்போது அனுதாபப்படுவதுபோல் காட்டிக் கொள்ளும் சமூகம் யாராவது மகிழ்ச்சியாக இருப்பதைக் கண்டதும் ஏன் பொறுமையடைகிறதோ!

விசித்திரமான சமூகம்!

இருபது வருடங்கள் கழிந்த பின்னும்கூட அந்தக்கண்ணன் கோயில் திருவிழாவில் அவரும் நானும் கடைசியாகச்சந்தித்து கடிதங்கள்பரிமாறிக்கொண்டதும், அவர் கடலையுடன்கடிதம் தர நான் கடலைதானே என்று அதை தங்கையிடம் கொடுக்க அவள் அதற்குள்ளிருந்த கடிதத்தை எடுத்து வாசிக்கத் தொடங்க அதைப் பார்த்த அம்மா அதென்ன கடிதம்; ஏது என்றுகேட்க அது ஏதோ கடலை சுற்றிய பேப்பராக்கும் என்று நான் அதைப்பறித்துக் கசக்கிவீசுவதுபோல் பாசாங்கு செய்து மறைத்துக் கொண்டதும்...

இப்போது நினைத்தாலும் நெஞ்சு பகீர் என்கிறது!

அடுத்த வீட்டுத்தோட்டத்துத் துலாவில் ஏறிநின்று பாட்டுப்பாடி என்னை அழைத்து அபிநயத்தால் பேசிக்கொண்டிருந்த அவர், அம்மாவைக்கண்டதும் கால் தடுக்கிக்கிணற்றுக்குள் விழுந்ததும்நான் என்னையுமறியாமல், "ஐயோ" என்று கூச்சலிட "என்னடி பிள்ளை?" என்று அம்மா பதறித் துடித்து ஓடிவர யாரோ அடுத்தவீட்டுக் கிணற்றுக்குள் விழுந்தமாதிரிச் சத்தங்கேட்டது என்று நான் சொல்ல ஆட்கள் விழுந்திருந்தால் சத்தம் போட்டிருப்பாங்கள் என்று அம்மா சொல்லிச் சென்றதும் "தனக்கு ஆபத்து இல்லை" யென்பதுபோல்கிணற்றுக்குள்ளிருந்தே விசில்அடித்து சாடை காட்டியதும்...

அப்பப்பா இப்படி எத்தனை நிகழ்ச்சிகள்? ஒன்றுஇரண்டா?

என்றாலும் எதிலும் வரம்பு மீறிச் செல்லவில்லை. பண்பும் அன்பும் அவர் உள்ளம்.

ஒருநாள் அவர் ஒரு "பிளவுஸ் பீஸ்" கொண்டு வந்து இது ஏதோ பிளவுஸ் பீசாம், வெளிநாட்டுத்துணியாம்; வீட்டில் வாங்கினுங்க; உமக்கும் ஒன்று நானும் இரகசியமாக வாங்கினேன்" என்று தந்த போது,

"இது என்ன விலை, அதிக விலையாயிருக்குமே!" என்று நான் கேட்டதும்;

"அன்பிற்கு விலையில்லை; இருந்தால் அதன்விலை அதிகம் தான்" என்று அவர் சொன்னதும் இன்றுதான் புரிகிறது.

அவர் தன்னை ஒரு பைத்தியம் என்று சொன்னுர்.

நான் மட்டும் என்ன?

நானும் ஒரு பெரிய பைத்தியக்காரி.

இவ்வளவு நேரமும் கனவாய் - பழங்கதையாய்ப் போன பழைய நிகழ்ச்சிகளை அசைபோட்டுக் காலத்தை வீணுக்கியிருந்தேனே!

என் மீது அன்பையே சொரியும் அருமையான கணவன்; என் அணைப்பிலேயே இன்பங் காணும் அன்புச் செல்வங்கள்.

எல்லாவற்றையும் மறந்து இத்தனை நேரமும் ... என்ன பைத்தியக்காரத்தனம்!

இதுதான் மனிதமனம்.

இதைத்தான் குரங்கு மனம் என்று சொல்கிறுர்களோ!

(யாவும் கற்பனை)

## சோவியத்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான மருத்துவபிரச்னைகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலுள்ள நட்புறவின் ஒரு சின்னம் என்று ஜவஹர்லால்நேரு. ஸ்மிர்னேவுக்கு எழுதிய கடிதத்தில் இந்த மொழிபெயர்ப்பை வருணித்துள்ளார்.

இந்த இந்தியக் காவியம் ஒய். எம். வொலோவின் வாழ்க்கையிலும் ஒரு முக்கிய அம்சமாகப் பரிணமித்தது.

ஓவியத்திறமைமிக்க இவர் மஹாபாரத மொழிபெயர்ப்புப் பதிப்புக்கு டிசைன் அமைத்தார். அண்மையில் வெளியிடப்பட்ட இந்த நூலின் பதிப்பாசிரியரும் இவரே. இதில் மஹாபாரதத்தின் மிக முக்கிய பகுதியான பகவத் கீதையும் இடம்பெற்றுள்ளது ஒவ்வொரு பாகத்திலும் அறிமுகக்கட்டுரையும், விளக்க அகராதியும் விளக்கக்குறிப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

## வானெலி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களை மட்டும் குறிப்பிடவேண்டும்.

சரி இப்பொழுது நீங்கள் வானெலி நாடகம் எழுதத் தயாராகிஇருப்பீர்கள். ஆரம்ப எழுத்தாளர்கள் இதனுல் மிகவும் பயன் பெறுவர் என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

நாடகம் எழுதி முடிந்தபின், ஒவ்வொரு பாத்திரத்தின் பெயர்களுக்குக் கீழேயும், அடைப்புக்குறிகளுக்குள் எழுதப்பட்டிருக்கும் அறிவுறுத்துரைகளுக்குக்கீழேயும் சிவப்பு மையினுல்கோடு கீறிவிடுங்கள். எழுதிமுடித்த பிரதியை நான்கு ஐந்து தடவைகள் திருப்பி வாசித்துப்பாருங்கள். அப்பொழுது சிலமாற்றங்கள் செய்யவேண்டுமென உங்கள் மனதில் தோன்றலாம்.

## வைஜயந்தி...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆள் நீங்களாகத்தான் இருக்க வேண்டும். இது வங்கப்பெயர் போல் இருக்கலாம். 'ஆனுல் அது முற்றிலும்தென்னிந்தியப் பெயரே! கேரளத்தில் சுசீந்திரம் என்ற யாத்திரை ஸ்தலத்தைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நானும் டாக்டர் பாலியும் அங்கு சென்றிருந்தபோது எங்களுக்குப் பையன் பிறந்தால் அப்படி அந்த ஸ்தலத்தின்பெயர் வைப்பதாக நேர்த்திவைத்திருந்தோம். சுசீந்திரம் என்பதிலுள்ள 'ம்' மை நான் நீக்கிவிட்டேன். அது எனது பஞ்சாபி கணவருக்கு அளித்த சலுகை!"

இவ்வாறு கூறினுர் வைஜயந்திமாலா.

(தமிழ்: வர்ண)

தேவை
அனுபவமுள்ள
கடைச்சல்தொழிலாளி
தேவை.
நேரில் வரவும்.
செனித்
லேத் வேக்ஸ்
56, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
6951

ST. JOHN'S COLLEGE & CHUNDIKULI GIRLS' COLLEGE, Jaffna.

Admissions 1978

Both Schools re-open on Monday the 5th of September, 1977.

1. Vacancies (St John's College) ONLY in the following Grades: ONE (1970), FOUR (1968), SIX (1966) TEN, (HNCE-1961)
2. Vacancies (Chundikuli Girls' College) ONE (1970), SEVEN (1965)
3. Applicants should have been born AFTER the 31st December of the years in brackets.
4. Apply before 30th September on forms available from the respective Schools.
5. Please send stamped, addressed, long envelope and Postal Order for Rs.2/- per form.
6. Admission TEST on Saturday the 8th October 1977
7. Scholarships available for pupils who do exceptionally well at the admission test.

(6972) Principals.

Green Memorial Hospital
Manipay
VACANCIES

Wanted:

1. MEDICAL OFFICER M. B. B. S.
(a) Fully Trained in Anaesthesia.
(b) Salary Negotiable.

2. SISTER TUTOR:- Whether in Active Service or Retired
(a) To be in charge of our Nurses Training and The Nursing Department.
(b) Salary Negotiable.

3 QUALIFIED NURSES:- Registered by the Ceylon Medical College Council.
(a) In General Nursing & Midwifery.
(b) In General Nursing.
(c) In Mid-Wifery.

4. Closing Date:- 12-9-77.

Apply to:- Acting Medical Superintendent, Green Memorial Hospital, Manipay. 6963

யாழ்ப்பாண கலவர மரண விசாரணை

# "பொலிஸார் மூன்று முறை எச்சரித்தார்கள்"

## நீதவான் கேள்விகளுக்கு சாட்சி ஏகாம்பரம் கூறியது

யாழ்ப்பாணம், ஞாயிறு (யாழ்ப்பாணக் கலவரத்தில் பலியானவர்களின் மரண விசாரணையின் நேற்றைய தொடர்ச்சி விபரம் வருமாறு)

### சாட்சி கூறியதாவது

சி.எஸ்.கே. சந்தியில் டயர் எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுது 10-30 மணியிருக்கும் நான் வீட்டிற்குபோக வெளிக்கிட பொலிஸார் கலைத்துக் கொண்டு வந்தார்கள் நான் குளத்தடியில் ஒளித்திருந்தேன்.

பொலிஸார் எரிந்த டயரை தூக்கிவந்து பழைய மார்க்கட்டிலுள்ள புகையிலைக்கடையில் போட்டார்கள். சூட்டுச் சத்தம் கேட்டது. நான் பயத்தால் ஓடிவிட்டேன் அப்போது சுமார் 500பேர் நின்றார்கள். டயர் எரிந்தது வெடிச்சத்தத்திற்கு பின்னர் பொலிஸார் சூட்டுக்கு முன்பு டயரை கொண்டுவந்து போட்டார்கள் நான் கிருஷ்ணபவானில் நின்று பார்த்தேன் சி.எஸ். கே.சந்தியில் பொலிஸார் டயரை தூக்கி போட்டபோது ராஜ்கோபால் கடைக்கு முன்னால் உள்ள கடைகள் எரிந்து கொண்டிருந்தது. ராஜ்கோபாலுக்கு முன்னால் உள்ள கடைகள் காலை 10-30மணியளவில் எரிந்து வெடி கேட்க முன்னர் கடைகள் எரிந்தது.

நீதவானின் கேள்விகளுக்கு சாட்சி ஏகாம்பரம் பதிலளித்தார்

நீதவான்: எந்தக் கடையிலாவது, யாராவது நெருப்பு வைத்ததை பார்த்திரா?-கண்ணாலே பார்த்தேன் பொலிஸார் தான் நெருப்பு வைத்தது.

நீதி: எப்படி வைத்தார்கள்? -பலகை கதவில்.

நீதி: எப்படி?- எரிந்த டயரை வைத்தார்கள்.

நீதி: பழைய மார்க்கட் கட்டடம் எப்ப விழுந்தது?- நெருப்பு எரிய விழுந்தது.

நீதி: யாருக்காவது புகார் செய்தீரா?- கச்சேரியில் பொலிஸுக்கு.

### எம். பி.யை காணவில்லை

நீதி: நீர் யாழ்ப்பாண எம். பியை கண்டீரா?-இல்லை.

நீதி: பொலிஸார் 3 தடவை போகும்படி கூறினார்கள்?-ஆம்.

நீதி: அந்த 3 தடவையும் சொல்லும் போது நெருப்பு வைக்கப்படவில்லை? இல்லை

நீதி: பொலிஸார் வந்தவுடன் சுட்டார்கள் என்று யாரும் சொல்லியிருந்தால் அதுசரியாக இருக்குமா? அப்படி ஒருதரும் சொல்லவில்லை.

நீதி: பொலிஸார் எப்ப எச்சரித்தார்கள்?- முதலில் 8 அல்லது 8-30 மணிக்கு இரண்டாம்முறை 9 அல்லது 9-30 மணிக்கு, மூன்றாவது தடவை 10 மணிக்கு எச்சரித்தார்கள்.

நீதி: மற்ற கடைகளுக்கு இப்படி பொலிஸார் எச்சரித்தார்கள்?-ஆம்.

### பயத்தால் ஓடிவிட்டார்கள்

நீதி: பொலிஸார் எச்சரித்த போது எத்தனை பேர் நின்றார்கள்? 3-ம் தடவை எச்சரிக்கும் போது பயத்தால் ஓடிவிட்டார்கள்.

நீதி: முதலில் எச்சரித்த போது எத்தனை பேர் நின்றார்கள்?- 50 பேர்.

நீதி: ராஜ்கோபல்ஸ் கடைக்கு முன் கடைகள் எரிந்தது?-ஆம்.

நீதி: கடைச்சாமான்களுக்கு என்ன நடந்தது?-மக்கள் சாமான்களை எடுத்துக் கொண்டு ஓடினார்கள்.

நீதி: என்ன சாமான்கள்?- சாரம், சேட், சாறி.

நீதி: எவ்வளவு நேரம் இது நடந்தது?- காலை 11 மணி வரை.

நீதி: எத்தனை பேர் சாமான்களை எடுத்தனர்?-கவனிக்கவில்லை.

நீதி: அக்கடைகளில் யாராவது யூனிபோம் போட்டவர்கள் சாமான்களை எடுத்ததைக் கவனித்தீரா?-இல்லை.

நீதி: வெற்றிலைக் கடைக்கு என்ன நடந்தது?-எரிந்துவிட்டது.

நீதி: வெற்றிலையை கொள்ளையடித்தார்களா?- இல்லை எரிந்துவிட்டது.

நீதி: இச்சம்பவம் ஏன் நடந்ததென்று தெரியுமா? தெரியாது.

நீதி: 2 பொலிஸ்காரரை மக்கள் தாக்கியது உமக்குத் தெரியுமா?- தெரியாது.

நீதி: பொலிஸ் ஜீப்புக்கு கல் எறிந்தது தெரியுமா?- தெரியாது.

நீதி: பாய்க்கடைக்கு இரவு நெருப்பு வைக்கப்பட்டதாக யாரும் சொன்னார்களா?- அன்றிரவு நெருப்பு வைக்கப்பட்டதாக மக்கள் கதைத்தார்கள்

நீதி: யார் நெருப்பு வைத்ததென்று கதைத்தார்களா?- யார் என்று சொல்லவில்லை.

நீதி: பொலிஸ் துப்பாக்கி காட்டி வெளியில் போகச் சொல்லி அடித்தார்களா?- வேறு ஆட்களுக்கு அடித்தார்கள் எனக்கு ஒன்றும் செய்யவில்லை.

### துப்பாக்கியால் அடித்தார்கள்

நீதி: என்னத்தால் அடித்தார்கள்?- துப்பாக்கியால்

நீதி: 3 தடவை பொலிசார் எச்சரித்தபோது ஒருவரையும் சுடவில்லை?-இல்லை.

நீதி: சூட்டுச்சத்தம் கேட்டது பொலிசார் எச்சரித்த பின்னர்தான்?- ஆம்.

நீதி; உமது கடையிலிருந்து ராஜ்கோபால்ஸ்முன் நடப்பதை பார்க்கலாமா?- இல்லை

உதவிப்பொலிஸ்அதிபர் திரு சில்வா நீதவான்மூலம் கேட்ட கேள்விகளுக்கு சாட்சி பதிலளித்தார்.

நீதி; சி. எஸ். கே. சந்தியில் டயர் எரிந்தது?- ஆம்

நீதி; பொலிசார் டயரை பழைய மார்க்கட்டில் போட்டார்களா?-ஆம்

நீதி: எவ்வளவு தூரமிருக்கும்?- தடியால் தூக்கிப்போட்டார்கள்.

நீதி: எவ்வளவு தூரம்?- 5யார் இருக்கும்.

நீதி:- றோட்டில் டயர் எரிந்து கொண்டிருப்பதை பொலிசார் அகற்றிவிட்டார்களா?- இல்லை. (க)

## அகதிகளுக்கு உதவ கிடுகு சேகரிப்பு

### யாழ் லயன்ஸ் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களினால் வவுனியாவில் தமது இல்லங்களை இழந்தவர்களுக்கு குடிசை அமைப்பதற்கு கிடுகுகளைச் சேகரித்துக் கொடுக்க யாழ். லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

வவுனியாப் பகுதியில் கிடுகுகள் இல்லாத காரணத்தினாலேயே லயன்ஸ் கழகம் யாழ். மாவட்டத்தில் இவற்றைச் சேகரித்து வவுனியாவுக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்து வருகிறது.

கிடுகுகளை அல்லது தென்னை ஓலைகளை அன்பளிப்புச்செய்ய விரும்புபவர்கள் யாழ் லயன்ஸ் கழக செயலாளர் லயன் இம்மானுவல் யோசப், சிலோன் மேர்சன்ட்ஸ் லிமிட்டெட் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் அல்லது லயன் பா. சிவானந்தன், 60, சுவாமியார் றோட் கொழும்புத்துறை என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

அன்பளிப்புச் செய்ய விரும்புபவர்கள் ஓரளவு பாவித்த கிடுகுகளையாவது கொடுக்கலாம். [இ]

## வைத்தியர்கள் நாளை கூடுவர்

(பண்டத்தரிப்பு)

வெளிமாகாணங்களில் சமீபத்தில் ஏற்பட்ட கலவரங்களினால் பாதிக்கப்பட்டு தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி வந்துள்ள பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள், உதவி வைத்தியர்கள் எதிர்காலம் பற்றிய முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு யாழ் அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சை நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

அரசாங்க பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் டாக்டர் ரி. கோபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தாய்ச்சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். [இ]


## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம் சின்னப்பு
(இளைப்பாறிய ஆசிரியை)

இளைப்பாறிய ஆசிரியை திருமதி சுந்தரம் சின்னப்பு காலமானார். இவர் இளைப்பாறிய தலைமை ஆசிரியர் சின்னப்புவின் அருமை மனைவியும், சிவஞான சுந்தரி பொன்னையா (ஆசிரியை, வேம்படி) தில்லைவாணன் (சேவையர்), சிவஞானதேவி (லண்டன்), சிறீஸ்காந்தன் (லண்டன்), சிவஞானமணி (லண்டன்) ஆகியோரின் அருமைத்தாயாரும். பொன்னையா (இ. போ. ச., கோண்டாவில்), விபுலானந்தன் (லண்டன்), பத்மாசனி ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும்.

176, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 6984

## நன்றி நவிலல்

நீராவியடி மலேயன் பென்சனர் திரு. சி. சின்னத்துரை அவர்களின் மனைவி காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்துச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மலர் வளையம் அளித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் நன்றி கூறும் அதே வேளையில் திங்கள் (5-9-77) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

சின்னத்துரை குடும்பத்தினர்
6981



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் .1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ந் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389. Registered as News paper in Sri Lanka.



